பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 09 | ஞாயிற்றுக்கிழமை 25.11.2018 | கதிர் 20

**இது ரகசியம் அல்ல!**

ஆட்சி அதிகாரத்துக்கான போட்டி உச்சியைத் தொட்டுவிட்டது. இனி என்ன?அரசியல் சேறு வாரி இறைத்தல் தாராளமாகத் தொடரும் என நம்பலாம்.

மைத்திரி – ரணில் இணைந்து நல்லாட்சி அரசை நடத்தியபோது தான் பல்லாயிரம் கோடி ரூபா ஊழல் தொடர்பு பக்கம் 02 »

# ரணிலின் கூட்டணியில் இணைகிறார் சந்திரிகா



## மைத்திரி-மஹிந்த கூட்டை தேற்கடிக்கப் புதிய வியூகம்

கொழும்பு, நவம்பர் 25

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயற்படத் தொடங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பக்கம் 11 »

## 27ஆம் திகதி கைதாகுவாரா அட்மிரல் விஜேகுணரத்ன?



கொழும்பு, நவ. 25

முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி முற்பகல் பக்கம் 11 »

## மாவீரர் நாள் நிகழ்வுகளை அனுமதிக்கவில்லை அரசு!

### அரச தகவல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

மாவீரர் நாள் நிகழ்வுக்கு அரசால் அனுமதி வழங்கப்படவில்லை என்று அரச தகவல் திணைக்களத்தின்பணிப்பாளர் நாலக கலுவெவ அறி பக்கம் 11 »

## ரயில் விபத்தில் ஒருவர் சாவு!

### முகமாலையில் பரிதாபம்

யாழ்ப்பாணம், நவ. 25

முகமாலையில் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட ஒருவர் ரயிலுடன் மோதிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பக்கம் 11 »

## மக்கள் நிராகரித்த மஹிந்தவை பிரதமராக்கியது பெரும் தவறு!

### ஜனாதிபதி மீது ரணில் கடும் விமர்சனம்



கொழும்பு, நவ. 25

மக்களால் ஓரங்கட்டப்பட்ட வரைமீண்டும்ஆட்சியில்அமர்த்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனபாரிய தவறிழைத்துவிட்டார் என ஐ.தே.க. பக்கம் 11 »

## 'மொட்டே சரணம் கச்சாமி' என மஹிந்தவிடம் மைத்திரி சரண்

### சம்பிக்க ரணவக்க காட்டம்



கொழும்பு, நவ. 25

'மொட்டே சரணம் கச்சாமி' என சரணடைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதியாக நினைத்தே மைத்திரிபால சிறிசேன மஹிந்தவோடு இணைந்து பக்கம் 11 »

## காபந்து அரசில் இணையோம்!

### மனோ திட்டவட்டம்



கொழும்பு, நவ. 25

காபந்து அரசு அமைப்பதற்கான அழைப்பை ஏற்று மீண்டும் அரசுடன் இணையப் போவ பக்கம் 11 »

## பொதுத் தேர்தலுக்கு இணங்கினால் ஐ.தே.கவுடன் சேர்ந்து காபந்து அரசு

### இறங்கி வருகிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, நவ. 25

பொதுத் தேர்தலுக்கு இணங்கினால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் காபந்து அரசு ஒன்றை அமைக்கத் தயார் என்று அரசு அறிவித்துள்ளது.

மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 11 »

## மஹிந்த செய்தது தவறு

### குமார வெல்கம சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25

மஹிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியில் பாரிய தவறு இழைத்துவிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம பக்கம் 11 »

## மஹிந்த அணியின் இரட்டை வேடம் அம்பலமாக்கினார் ஜேர்மன் தூதுவர்!



Joern Rohde
@joern_rohde

Why this unfair criticism at Canadian HC and members of the diplomatic Community?
Last Tuesday around a dozen envoys including Canadian HC and myself met with 4 leading UFPA MPs/ Ministers on their request. We respected their request for confidentiality.
11/23/18, 12:48 PM

கொழும்பு, நவ. 25

மேற்குலக நாடுகளின் தூதுவர்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

இலங்கைக்கான ஜேர்மன் பக்கம் 11 »

## மைத்திரியின் ஊடகப் பிரிவு பணிப்பாளரானார் ராகவன்



கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பிரிவின் புதிய பணிப்பாளராகவும், ஜனாதி பக்கம் 11 »

## ஜனாதிபதி வேட்பாளராக மீண்டும் நிறுத்தப்படமாட்டார் மைத்திரிபால

### அவரைக் கைகழுவ தயாராகிறது மஹிந்த அணி



கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் போட்டியில் நிறுத்தப்படும் வாய்ப்புகள் இல்லையென்றுகொழும்புஊடகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மைத்திரிபால சிறிசேனவை அடுத்த பக்கம் 11 »

# மாகாண சபைத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும்

## 'கபே' அமைப்பின் பணிப்பாளர் தெரிவிப்பு

**மாகாணசபைத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டுமென இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான கபே தெரிவித்துள்ளது.**

**கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சத் கீர்த்தி தென்னக்கோன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இதனைத் தெரிவித் துள்ளார். அவர் மேலும் கூறுகையில்.-**

ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட முடியாது. முத லில் மாகாணசபைத்தேர்தல்நடத்தப்பட வேண்டும்.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் அரசியல் குழப்பநிலைமைகளை கருத்திற் கொண்டால் பொதுத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டுமெனத் தெரிகின்றது.

எவ்வாறெனினும், மாகாண சபைத்தேர்தல்கள்14 மாதங்களாக காலம் தாழ்த் தப்பட்டுள்ளது. ஒன்பது மாகாணசபைகளில் ஆறு மகாணசபைகளின் பதவிக் காலம் பூர்த்தியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலையோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலையோ நடத்துவது கட்டாமானதல்ல அது நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடத்தப்பட முடியும்.

அண்மைய அரசாங்கங்கள் தேர்தல்களை ஒத்தி வைத்து வந்துள்ள நிலையில், ஜனாதிபதி தேர்தலை அவ்வாறு ஒத்திவைக்க முடியாது என ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பிணைமுறி குற்றச்சாட்டு வெளியானது. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய இப்போது வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்கின்றன.

அந்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை வெளியான போது, அதில் சில முக்கிய பக்கங்கள் வெளிப்படுத்தப்பட வில்லை. வழக்குக்கு முக்கியமான அம்சங்கள் – பகிரங்கப்படுத்த முடியாதவை எனத் தெரிவித்து – அப்போது மூடி மறைக்கப்பட்டன.

பிணைமுறிஊழல்விடயத்தில் ஐ.தே.கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் தொடர்புபட்டிருக்கின்றனர் என்பதை அம்பலப் படுத்தும் விடயங்கள் அடங்கிய அறிக்கைப் பகுதியே அப்போது பகிரங்கப்படுத்தப்படாமல் மறைக்கப்பட்டதாக ஒரு பேச்சடிபட்டது.

அன்றைய பிரதமர் ரணிலுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான நட்புறவு இப்போது முறிந்துவிட்டது. இப்போது அரசியலில் அவர்கள் பரம வைரிகள்.

இனி என்ன? இதுவரை மூடி மறைக்கப்பட்ட பிணை முறி விசாரணை தொடர்பான ஜனாதிபதிஆணைக்குழுவின்அறிக்கைப் பகுதிகள் விரைவில் அம்பலப் படுத்தப்பட்டு பகிரங்கப்படுத்தப்படும் என்கின்றன விடயமறிந்த அரசுத் தரப்பு வட்டாரங்கள்.

பிணைமுறிஊழல்இடம்பெற்றதாகக் கூறப்படும் காலத்தில் நிதி அமைச்சராக இருந்த ரவி கருணநாயக்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அந்த அரசின் மூத்த அமைச்சர்கள் ஆகிய ஐ.தே.கவின் உயர்மட்டத் தரப்பினரின் முகத்தில் கரிபூசுவது போன்றநிலைமையைஏற்படுத்தும் விதத்தில் இந்த அறிக்கைப் பக்கங்கள் அம்பலமாகும் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

எது, எப்படியென்றாலும் இந்த விடயத்தில்ஊடகங்களுக்கு நல்ல தீனி காத்திருக்கின்றது என்பது மட்டும் நிச்சயம்.

★ ★ ★

ஒருசிலநாள்களுக்குமுன்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி., சத்தம் சந்தடியின்றி வெளிநாட்டு விசிட் ஒன்று அடித்தமை குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்தேன்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகள், நெருக்கடிகள் தொடர்பாக பொதுநலவாய அமைப்பின் சில தலையீடுகள் திடீரெனவரும்போது சுமந்திரனின் வெளிநாட்டு விசிட்டின் தாற்பரியம் புரியத் தொடங்கும் என்று அதில் கோடி காட்டியிருந்தேன்.

அந்தவிடயத்தைநான்நேற்று முன்தினம் மாலையில் எழுதி முடித்து அச்சுக்குக் கொடுத்த சமயத்தில் – அந்த எழுத்தின் மை காய்வதற்கு இடையில் – இந்த விடயத்தில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பரொனொஸ் பட்றீசியா ஸ்கொட்லாண்ட் அம்மையாரிடம் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு வந் துள்ளது.

இருவருக்கும் இடையிலான உரையாடல் குறித்து ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்ட செய்தியில் விவகாரம் அடக்கி வாசிக்கப்பட்டிருக்கின்றது என விவரம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சுமந்திரன் பற்ற வைத்த வத்தி சரியாகவே இலக்கைப் பற்றியிருக்கின்றது என்றும் –

அதன் விளைவே பொதுநலவாய செயலாளர் நாயகத்திடமிருந்து எச்சரிக்கையான பாணியில் ஜனாதிபதிக்கு வந்த அந்த அழைப்பு என்றும் – அந்த வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.

இந்தவார இறுதிக்குள் (30 ஆம் திகதிக்குள்) அரசியல் நெருக்கடிகளுக்கு ஜனநாயக மாண்புகளுக்கு அமைய தீர்வை காணும்படி ஜனாதிபதி அறிவுறுத்தப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

விரைந்து அந்தத் தினத்துக்குள், தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு நியாயமான தீர்வைக் காணாவிட்டால் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நிறுத்தும் அறிவிப்பை வெளியிடக்கூடிய ஆபத்தக்கான ஏது நிலைகள் காணப்படுகின்றன என்றும் –

அதிலும் கூட, சுமந்திரனின் கைங்கரியம் முக்கிய இடம் வகிக்கின்றது என்றும் –

அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

மைத்திரி – மஹிந்தர் கூட்டணிக்கு சுமந்திரன் தான் 'றியல் வில்லன்' போலும் ...!

**மின்னல்-**

# தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கை மீளவும் ஆரம்பம்

மட்டக்களப்பு, நவ. 25

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப மற்றும் வியாபார முகாமைத்துவ பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் நாளை 26ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

குழப்பநிலை காரணமாக இந்தப் பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் கடந்த ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் விடுதிகளுக்கு சமுகமளிக்குமாறும் பதிவாளர் அறிவித்துள்ளார்.(ஐ)

# மஹிந்த தரப்பு இயலாமையால் இடைக்கால அரசுக்கு அழைப்பு

## கிண்டலடிக்கின்றார் ஐ.தே.க. செயலாளர்

இடைக்கால அரசாங்கம் அமைக்க பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சியை அழைத்துள்ளமையானது, பொதுஜன பெரமுனவின் வங்கரோத்து நிலைமையை எடுத்துக் காட்டுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி இடைக்கால அரசாங்கத்துக்கு நேற்றுமுன்தினம் விடுத்திருந்த அழைப்பு குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியுள்ளார். நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மைக் கட்சியே இடைக்கால அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளது. நமக்கு அரசாங்கம் அமைக்க முடியும். நாம் விரைவில் அரசாங்கத்தை அமைப்போம். அதன்பின்னர், கட்சித் தலைவர்களை ஆலோசித்து தேர்தலுக்கு செல்வது குறித்து தீர்மானிப்போம்.

அரசாங்க தரப்பின் எதிர்பார்ப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. பிரதமரை நியமித்து, அரசமைப்பை மீறி நாடாளுமன்றத்தைக் கலைத்து, பின்னர் தாம் அரசாங்கம் அமைத்துக் காட்டுவதாகவும், தமக்குப் பெரும்பான்மை உண்டு என்றும் கூறிய ஸ்ரீ ல.பொ.ஜ.பெ. கட்சி இப்போது இடைக்கால அரசாங்கத்துக்கு இறங்கி வந்துள்ளது. இவர்களின் இந்த அழைப்பைக் கேட்கும் போது வெட்கப்படவேண்டியுள்ளது.

# மஹிந்தவை நாம் எதிர்க்கவில்லை; ரணிலை ஆதரிக்கவும் கூட இல்லை

## கூட்டமைப்பின் நிலைப்பாட்டை விளக்குகிறார் சத்தியலிங்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்தவை எதிர்க்கவும் இல்லை, ரணிலை ஆதரிக்கவும் இல்லை. எம்மைப் பொறுத்தவரை இருவருமே ஒன்று தான் என வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் நேற்று நகரக்கிளையின் தலைவர் சி.சிவசோதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கைத் தீவில் வாழுகின்ற தமிழ் மக்கள் முன்னே மூன்று தெரிவுகள்தான் இருந்தன. ஒன்று – அகிம்சை ரீதியில் போராடி உரிமைகளை பெற்றுக் கொள்ளல், இரண்டாவது – ஆயுத ரீதியில் போராடி உரிமைகளை பெற்றுக்கொள்ளல், மூன்றாவது – அரசுடன் ஒப்பந்தமொன்றினை செய்து உரிமைகளை பெற்றுக்கொள்வது. எனினும் துரதிஷ்டவசமாக இவை மூன்றுமே இறுதியில் தோற்றுபோயின. 2009 யுத்தமுடிவுக்கு பின்னர் தமிழர் தரப்பு இறுதியான தெரிவாக அரசியல் யாப்பில் மாற்றமொன்றினை ஏற்படுத்தி சட்டரீதியாகத் தமிழ் மக்களுக்கான உரித்தினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயற்பட்டது.

இலங்கைத்தீவில் மாறி மாறி ஆட்சிசெய்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருக்கட்டும், ஐக்கிய தேசிய கட்சியாக இருக்கட்டும் இரண்டுமே தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமையை தருவதற்கு தயாராக இருந்திருக்கவில்லை. சர்வதேச அழுத்தங்களின் போது அவ்வப்போது ஒருகட்சி உரிமைகளைத் தருவதற்கு முயன்றால் அதனை மற்றைய கட்சி தடுத்ததே வரலாறாகும்.

எனினும் இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக 2015ல் இரண்டு சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் இணைந்து உருவாக்கிய தேசிய அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்குமென மக்கள் நம்பினர். அதற்காக தமிழ்த் தேசிக்கூட்டமைப்பும் பொறுப்புடன் செயற்பட்டது. அரசியல்யாப்பில் மாற்றமொன்றினை ஏற்படுத்தவதினூடாக நிரந்தரமான அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்ளும் முகமாக கூட்டமைப்பு விமர்சனங்களுக்கு மத்தியில் கடந்த நான்கு வருடங்கள் பல்வேறு விட்டுக்கொடுப்புடன் தேசிய அரசுடன் செயற்பட்டது. புதிய அரசமைப்பு உருவாக்கத்திலும் கூட்டமைப்பு கணிசமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது.

இந்த நிலையில் இம்மாதம் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பின் நகல் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு முன்னோக்கி நகர்த்தப்படவிருந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் வலிந்து ஓர் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளமை புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாங்களே தங்களால் உருவாக்கிய அரசியல் யாப்பை மீறும் கைங்கரியத்தில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ள நிலையில் புதிய யாப்பு உருவாவது எட்டாக்கனியாகவே தென்படுகின்றது. இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டை ஜனநாயகத்தை மதிக்கும் சர்வதேச நாடுகளும், உள்ளூரில் அனைத்து தரப்பினரும் எதிர்க்கின்றார்கள். இந்த செயற்பாட்டில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் இணைந்து தனது எதிர்ப்பை தீவிரமாக காட்டி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்தவை எதிர்க்கவும் இல்லை, ரணிலை ஆதரிக்கவும் இல்லை. எம்மைபொறுத்தவரை இருவருமே ஒன்றுதான். நாங்கள் எதிர்ப்தெல்லாம் அரசியல் அமைப்பை மீறிய ஜனநாயகப் படுகொலையைத்தான். ஆனாலும் பலர் இலங்கையின் அரசியல்யாப்பை பற்றிநாம்ஏன்கவலைப்படவேண்டுமென்கின்றார்கள். நாம் இப்போது நம்பியிருப்பது அரசமைப்பு மாற்றத்தினூடான தீர்வையே. அதுவே நீடித்து நிலைத்து நிற்கும் தீர்வாக அமையும். மாறாக ஒப்பந்தங்களினூடான தீர்வு எதுவும் நீடித்து நிற்காது. இதுவே எமது கடந்தகால அனுபவமாகும்.

இலங்கையில் ஒரு ஸ்திரமான ஆட்சியின்றி அது சாத்தியப்படாது. – என்றார்.

# மஹிந்த ஆட்சியால் அச்சத்தில் மக்கள்!

## மங்கள சமரவீர தெரிவிப்பு



கொழும்பு, நவ. 25

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி, மக்களிடத்தில் அச்சத்தை தோற்றுவிக்கும் ஆட்சியென முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் சர்ச்சை தொடர்பாக சனல் 4 தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த இலங்கையை 10 வருடங்கள் ஆட்சி செய்த காலத்தில் அவர் அச்சத்தின் குறியீடாகவே திகழ்ந்தார். கடந்த மூன்று வாரங்களில் நாடு முழுவதும் மீண்டும் அச்ச உணர்வை மஹிந்த ஏற்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் மஹிந்தவின் ஆதரவாளர்கள் மிகவும் தவறான முறையில் செயற்பட்டமையை அனைத்து மக்களும் அவதானித்திருப்பார்கள்.

நாட்டின் பிரதமராக மஹிந்த கடமைகளைப் பொறுப்பேற்றால் அச்சத்துடன் கூடிய சூழ்நிலையில் வாழவேண்டி ஏற்படும் என்பதை மக்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள் – என்றார். (ஐ)

# ரணிலுடன் உறவு முறிந்தது ஏன்? புத்தகம் எழுதுகிறாராம் மைத்திரி

கொழும்பு, நவ. 25

'ரணிலுடன் வெற்றியளிக்காத அரசியல் பயணம்' எனும் நூலை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடவுள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பிலும் தம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மைதானத்தில் தனியே இருந்து விளையாடியதைப் போல நாடாளுமன்றத்தில் முழுநாளும் இருந்தனர்.

நாடாளுமன்றத்தில் இருக்காத என்னை அவர்களின் உரைகளின் ஊடாக விளையாட்டுப் பொருளாக்கியதை நான் பார்த்தேன். எனது மகள் எழுதிய 'ஜனாதிபதி தாத்தா' என்னும் நூல் நாடாளுமன்றத்தில் பேசு பொருளாகியது. குழப்பமடைய வேண்டாம் என அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

'ரணிலுடன் வெற்றியளிக்காத அரசியல் பயணம்' எனும் நூலை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடவுள்ளேன். ஜனவரி மாதம் அதனையும் வாசிக்குமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த நாட்களில் எவ்வாறெல்லாம் என் மீது விமர்சனங்கள் முன்வைக்கின்றார்கள் என நான் பார்த்தேன் – என்றார். (ஐ)

# சர்வாதிகாரத்தை தோற்கடித்து ஜனநாயகத்தை நிறுவுவோம்

## அகிலவிராஜ் காரியவசம் சூளுரை



கொழும்பு, நவ. 25

போராட்டத்தினூடாக, நாட்டில் தலைதூக்கியுள்ள சர்வாதிகாரத்தைத் தோற்கடித்துவிட்டு, ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசியல் நெருக்கடிகளை, நாடாளுமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு எமது கட்சி தயாராக உள்ளது. அதற்கு மறுப்புத் தெரிவித்தால் வீதியில் போராட்டங்களை முன்னெடுத்தும் தீர்வைக் காணத் தயார்.

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இனமத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சகல மக்களின் ஒத்துழைப்பின் மூலமே நாட்டின் தற்போதைய சர்வாதிகார நிலைமையை மாற்றியமைக்க முடியும் – என்றார். (ஐ)

# 'மிகப்பெரும் காட்டிக்கொடுப்பு' நானும் புத்தகம் எழுதவுள்ளேன்

## மைத்திரிக்கு ராஜித பதிலடி

கொழும்பு, நவ. 25

'மிகப்பெரிய காட்டிக்கொடுப்பு' என்ற தலைப்பில் தானும் புத்தகமொன்றை எழுதவுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணிலுடனான அரசியல் உறவில் ஏற்பட்ட முறிவு குறித்து புத்தகமொன்றை எழுதவுள்ளார் என ஜனாதிபதி அறிவித்தார். நானும் புத்தகமொன்றை எழுதவுள்ளேன்.

இலங்கை வரலாற்றில் மன்னர் காலத்தில் இடம்பெற்ற காட்டிக்கொடுப்புக்குப் பின்னர் அரங்கேறிய மிகப்பெரிய காட்டிக்கொடுப்பு தொடர்பிலேயே அந்தப் புத்தகம் எழுதப்படும்.

பெரும்பான்மையை நிரூபிக்கமுடியாத மஹிந்த அணி, உடனடியாக வெளியேற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பிரதமர் அலுவலகம் முற்றுகையிடப்படும். யானைப்படை வீதிக்கு இறங்கினால் என்ன நடக்கும் என்பதை மஹிந்த அணிக்கு சொல்லிக்கொடுப்போம்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் கதையைக்கேட்டு மைத்திரி இன்று குழப்பிபோய் உள்ளார். நம்பிக்கையை அவர் இழந்துவிட்டார். பெரும்பான்மையும் இல்லை. வேறு எதுவுமே இல்லை – என்றார். (ஐ)

# அற்ப ஆசையினால் சதிக்கு துணைபோனார் ஜனாதிபதி

## ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 325

ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டில் சர்வாதிகாரத்தை உருவாக்கவும் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாகும் அற்ப ஆசையினாலுமே நாட்டில் இவ்வாறான நெருக்கடி நிலையினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்தியுள்ளார் என மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான மக்களின் நீதிக் குரல் என்ற போராட்டம் ஐக்கிய தேசிய கட்சியின் ஏற்பாட்டில் நேற்று கண்டி நகரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டபோதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்ட இழப்பினை சரிசெய்வதற்காகச் சதித்திட்டத்தால் முழு நாட்டையும் இன்று பிரச்சினைக்கு உள்ளாக்கியுள்ளார். ஆனால் நாங்கள் சதித்திட்டங்களுக்கு துணைபோகப் போவதில்லை –என்றார். (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கிய வெள்ளவத்தை

நாட்டின் பல பகுதிகளில் நேற்று மாலை வேளையில் அடைமழை பெய்து வருகின்றமையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் பல பகுதிகளில் நேற்றுப் பெய்த அடைமழை காரணமாக பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

குறிப்பாக வெள்ளவத்தைப் பகுதியில் பாமன்கடை, கிருலப்பனை உள்ளிட்ட பல பகுதிகளில் வீதிகளில் வெள்ள நிலைமை ஏற்பட்டது.

பல இடங்களில் மக்களின் குடிமனைகளுக்குள் வெள்ள நீர் புகுந்தமையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

# மஹிந்த அணியின் முக்கியஸ்தர் கைது

கொழும்பு, நவ. 25

எம்பிலிப்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டி வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எம்பிலிப்பிட்டி பிரதேசசபை உறுப்பினர் ஜயவீர மாத்தரஆரச்சியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதேசசபை உறுப்பினரின் தாக்குதலுக்கு இலக்கான வைத்தியர் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

# அதிகார மோகத்தால் அரசு மக்களை மறந்து நடக்கிறது

## சுஜீவ சேனசிங்க சாடல்

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், மஹிந்த ராஜபக்ஷவும் அதிகார மோகத்தில் நாட்டையும், நாட்டு மக்களையும் மறந்து செயற்படுகின்றனர் என, ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டில் இடி விழுந்தாலும் கவலைக்கொள்ளாது, நான் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்றே ஜனாதிபதி நினைக்கிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அமர்வில், மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின்போது உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று ரூபாவின் விலை பாரிய அளவில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. கடன் சுமை அதிகரித்து வருகின்றது. இதனைப் பொது மக்களே சுமக்க வேண்டியுள்ளது. இந்நிலையில், சட்டவிரோத பிரதமர் ஒருவரை வைத்துகொண்டு ஜனாதிபதி ஆட்சி செய்து வருகின்றார்.

இன்றும் நாம் எமது பெரும்பான்மையை நிரூபித்துவிட்டோம். ஜனாதிபதி இப்போதே அரசமைப்பை மீறி நாட்டை நாசமாக்கிவிட்டார்.

ஜனாதிபதி விட்ட தவறைச் சரி செய்ய ஒரு வாய்ப்பு உள்ளது. காலம் கடந்துவிட்டது. ஆனால் காலம் கடந்தேனும் அவர் மக்களுக்காக ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## எந்த அரசும் சிறுபான்மையே

பதவியில் இருந்த பிரதமர் ரணில் மீது ஜனாதிபதி சிறிசேன கொண்ட காழ்ப்புணர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மோதல் நாட்டின் ஜனநாயக ஆட்சி முறைக்கே பெரும் சவாலாக வந்து அமைந்திருக்கின்றது.

நாட்டின் உயர் சட்டவாக்கல் சபையான நாடாளுமன்றத்தின் அதிகாரமும், மாண்பும் கேள்விக்குள்ளாகும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது.

அரசமைப்பு நடைமுறைகளுக்கும் சட்டத்துக்கும் மாறாக –

★ அதிகாரத்தில் இருந்த பிரதமர் யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

★ நாடாளுமன்றப் பெரும்பான்மை பெறாத ஒருவர் பிரதமர் பதவியில் அமர்த்தப்பட்டு, அதிகாரத்தில் தொடருகின்றார்.

★ நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தலையீட்டால், அந்தக் கலைப்பு நடவடிக்கை ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டிருக்கின்றது.

★ பெரும்பான்மை இல்லாது என்று நாடாளுமன்றத் தளத்திலேயே ஒன்றுக்கு, நான்கு தடவை நிரூபிக்கப்பட்ட ஓர் அரசு, எதேச்சாதிகாரமாக ஆட்சியில் தொடருகின்றது.

– இப்படி சட்டத்தைக் கேள்விக்குள்ளாக்கி, ஜனநாயக மாண்புகளைத் துச்சமாகத் தூக்கி எறிந்து, அராஜகப் போக்கிலான ஆட்சி தொடருகையில் மக்கள் மத்தியில் சில கேள்விகள் எழுந்துள்ளன.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தவிர எஞ்சியோரில் 122 பேர் தற்போதைய மஹிந்த அரசை எதிர்கின்றனர். அதன்படி, மஹிந்த அரசுக்கான ஆதரவுப்பலம் ஆகக்கூடிய 102 உறுப்பினர்கள்தாம்.

மறுபக்கத்தில் மஹிந்த அரசை எதிர்க்கும் 122 பேரில், பதினான்கு பேர் தமிழ்க் கூட்டமைப்பினர். ஜே.வி.பியினர் அறுவர். இந்த இருபது பேர் போக, ஐக்கிய தேசிய முன்னணி தரப்பில் இருப்பவர்களும் 102 எம்.பிக்கள்தாம்.

மஹிந்த அரசுக்கு மாற்றாக ஐக்கிய தேசிய முன்னணி அமைக்கக் கூடிய அரசில் தாங்கள் இடம்பெறப் போவதில்லை என ஜே.வி.பியும், கூட்டமைப்பும் ஏற்கனவே திட்டவட்டமாக – வெளிப்படையாக – அறிவித்துவிட்டன.

அப்படியாயின், இப்போது மஹிந்த ராஜபக்ஷ தரப்பு 102 எம்.பிக்களுடன் அமைத்துள்ளமை போன்றே, அதே எண்ணிக்கையான102 எம்.பிக்களுடனான சிறுபான்மை அரசு ஒன்றைத்தானே ஐக்கிய தேசிய முன்னணியினால் நிறுவமுடியும் என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

அவ்வாறு பார்த்தால், நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணித எண்ணிக்கையின்படி ஆட்சி அமைக்கவும் தொடரவும் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணி கோரும் அதே உரிமை மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கும் உள்ளது தானே என்ற கேள்வி எழுவதும் கூடச் சரியானதுதான்.

ஆனால், தற்போதைய மஹிந்தரின் அரசுக்கும், அதற்கு மாற்றாக அமையக்கூடிய ஐ.தே.முன்னணி அரசுக்கும் இடையில் இன்றைய நிலையில் பிரதான வேறுபாடு ஒன்று உண்டு.

அது, தமிழ்க் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகியன மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசை மூர்க்கமாக எதிர்க்கின்றன, இதுவரை இருந்த – அல்லது இனிமேல் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய – ஐக்கிய தேசிய முன்னணி அரசை இந்த இரு தரப்புகளும் இன்றைய நிலைப்பாட்டில் எதிர்க்கும் – அல்லது வீழ்த்தும் – எண்ணத்தில் இல்லை என்பதுதான்.

அதாவது, இன்றைய நிலையில் மைத்திரி – மஹிந்த கூட்டு நாடாளுமன்றத்தில் அமைந்திருக்க்கூடிய தற்போதைய அரசோ, இனிமேல் ஐக்கிய தேசிய முன்னணி, இந்தத் தரப்புக்கு மாற்றாக அமைக்கக் கூடிய அரசோ – இரண்டுமே – நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறமுடியாத ‘மைனோரிட்டி’ (சிறுபான்மை) அரசாகத்தான் இருக்க முடியும்; இருக்கும்.

சிறுபான்மை அரசாக இருந்தாலும், அதை ஆட்சியிலிருந்து வீழ்த்துவதற்கு வசதியாக எதிரணிகள் ஒன்றிணையாத வரை அந்த அரசு தப்பிப் பிழைத்துத் தனது அதிகாரத்தைக் கொண்டு நடத்த முடியும் என்பதே உண்மை; யதார்த்தம், முறைமை.

இன்றைய மஹிந்த ராஜபக்ஷ அரசைப் பொறுத்தவரை அந்தச் சிறுபான்மை அரசை வீழ்த்துவதற்கு எதிரணிகள் ஒன்றுபட்டு, உறுதியோடு திடமாக நிற்கின்றன.

அதற்கு மாற்றாக அரசுக்கு வரக்கூடிய ஐக்கிய தேசிய முன்னணித் தரப்பு அத்தகைய எதிர்ப்பு நிலையை இதுவரை சம்பாதித்துக் கொள்ளவில்லை.

அந்த உத்தேச அரசில் இடம்பெறவே மாட்டோம் என்று கூறியுள்ள ஜே.வி.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைபும், அதற்காக அந்த அரசை எதிர்த்து அதனை வீழ்த்துவோம் என்று அறிவிக்கவில்லை.

அதுவரையில், அந்த மாற்றுஅரசை வீழ்த்துவதற்கான ஏதுநிலைகள் – சாத்தியக்கூறுகள் – இல்லை என்பதுதான் நிலைமை.

# குழப்பங்களால் இலங்கைக்கு உலக அரங்கில் அவப்பெயர்

## ஆதிவாசிகளின் தலைவர் விசனம்



கொழும்பு, நவ. 25

நாட்டில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை காரணமாக உலக அரங்கில் இலங்கை கேலிக்குரிய ஒன்றாக மாறியுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் உருவரிகே வன்னிலஅத்தே தெரிவித்துள்ளார்.

நாட்டை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்கள் நாட்டை நிருவகிக்கும் போது முன்னெடுக்கும் நடவடிக்கைகளே இந்நிலைக்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

புத்திஜீவிகள் அமைப்பொன்றுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சகல சமயத் தலைவர்களும் ஒன்றிணைந்து நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அரசியல் தலைவர் களுக்கு ஆலோசனை வழங்க முன்வர வேண்டும் எனவும் ஆதிவாசிகளின் தலைவர் மேலும் கேட்டுள்ளார். (ஐ)

# பொது வேட்பாளராவதே கரு ஜயசூரியவின் கனவு

## கூறுகிறார் லக்ஸ்மன் யாப்பா



கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக வருவதே சபாநாயகர் கருஜசூரியவின் இலக்கு எனவும், இதனாலேயே அவர் நாடாளுமன்றத்தையும் நாட்டையும் குழப்பியடித்து வருகிறார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாபா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள பொது ஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்துக்குள் ஐ.தே.கவின் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றி வருவதன்மூலம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க பொது வேட்பாளராகக் களமிறங் குவதே அவரது கனவாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

# முறிகண்டி ஆலய அபிவிருத்தி; நேற்று விசேட கலந்துரையாடல்



முல்லைத்தீவு, நவ. 25

முறிகண்டி பிள்ளையார் ஆலய வளாகத்தை அபிவிருத்தி செய் வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆலய வளாகத்தில் நேற்று சனிக்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது கோவில் அமைந்துள்ள பகுதியிலுள்ள கடைகளை பொருத்தமான இடத்துக்கு மாற்றுதல், வளாகத்தை அபிவிருத்தி செய்தல், போக்குவரத்து வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர்,

கோவில் அபிவிருத்தி தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன எனவும், அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடப் பட்டதாகவும் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், கோவில் நிர்வாகத்தினர், வர்த்தகர் சங்கத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு**

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16
2018

பெண்களுக்கெதிரான அனைத்து
வன்முறைகளையும் இல்லாதொழித்து,
அனைவரும் மகிழ்வாய் வாழ்ந்து இன்புற
இன்றைய நாளில் சபதம் கொள்வோம்

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

JSAC

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

“புல்லின் இதழை மாந்தன் உருவாக்கும் வரை இயற்கை அவனது அறிவியல் அறிவைக் கண்டு சிரிக்கவே செய்யும்.”

*(தோமஸ் அல்வா எடிசன்(அமெரிக்க அறிவியலாளர்)*

## நாளை

26.11.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்:திருவாதிரை பி.ப. 3.06 வரை
திதி : திருதியை கா. 7.13 வரை சதுர்த்தி பி.இ. 5.03 வரை
சுபநேரம் :12.12 – 1.42 வரை
இராகுகாலம் : 7.42 – 9.12 வரை

# ஒரு தவறை மறைக்க ஜனாதிபதி பல தவறுகள் செய்து வருகிறார்

## சாடுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, நவ. 25

**ஜனாதிபதி ஒரு தவறை மறைக்கப் பல தவறுகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றார் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.**

**நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கபீர் ஹாசிம் இவ்வாறு தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் செய்த தவறை மறைக்கவும் அதனை நியாயப்படுத்தவும் பல தவறுகளைத் தொடர்ந்தும் செய்துவருகின்றார்.

சோபித தேரரின் பூதவுடலுக்கு முன்னால் இருந்து, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பேன் எனத் தெரிவித்த ஜனாதிபதி இன்று அரசமைப்பில் அவருக்கு இல்லாத அதிகாரத்தையும் தனக்கு இருப்பதாக தெரிவித்து நாடாளுமன்றத்தையும் கலைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேபோன்று சோபித தேரரின் நினைவு தினத்தில் அரசின் 100 நாள் வேலைத்திட்டம் தனக்குத் தெரியாது எனத் தெரிவித்திருந்தார். ஆனால் 100 நாள் வேலைத்திட்டத்தில் நாங்கள் பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டோம்.

ஆனால் நாட்டின் வளங்களை விற்பனை செய்வதாக எங்கள் மீது குற்றம்சாட்டி மீண்டும் மஹிந்தவுக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

இதனால் நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாங்கள் ஆரம்பித்த வேலைத்திட்டங்களான கிராம எழுச்சி, என்டபிரைஸ் சிறிலங்கா, வீட்டுத்திட்டம், பட்டதாரிகளுக்கான தொழில்வாய்ப்பு போன்ற வேலைத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மக்களே பாதிக்கப்படுகின்றனர்–என்றார். (ஐ)

# சபை வாக்கெடுப்பு சட்ட ரீதியானதல்ல

## நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, நவ. 25

நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு சட்ட ரீதியானது அல்ல என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டத் தொகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வாக்கெடுப்பு சபாநாயகரின் விருப்பத்திற்கு அமைய இடம்பெற்றது. புதிய அரசையோ அல்லது பிரதமரையோ அதன் மூலம் நியமிக்க முடியாது–என்றார்.

இதேவேளை, அரசமைப்பு மற்றும் நீதிமன்றத் தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தி இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் நாடாளுமன்றம் நிலையியற் கட்டளை மற்றும் சட்ட ஒழுங்குகளுக்கு எதிராக இடம்பெற்றதாகவும், அதனாலேயே ஆளும் கட்சியினர் புறக்கணித்தனர் எனவும், சட்ட ரீதியாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதற்கு அரசு முகம் கொடுக்க தயார் எனவும் விமல் மேலும் கூறினார். (ஐ)

# 12 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, நவ. 25

நாடளாவிய ரீதியில் பல இடங்களில நிலவும் மழையுடனான வானிலையால், தப்போவ உள்ளிட்ட 12 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள், இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, நுவரவெவ, மஹவிலச்சிய, இராஜாங்கனை, மஹகன தராவ, பதகிரிய ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தெபரவெவ, தெதெரு ஓயா, முருதவெல, திஸ்ஸவெவ, வீரவில ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன எனவும் இந்த நீர்த்தேக்கங்களுக்கு அருகில் தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# மக்களுக்காக உயிர் துறக்கவும் தயங்கமாட்டாராம் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 25

தொடரும் அரசியல் யுத்தத்தில் தன்னுடைய பதவி, உயிர் இரண்டுமே இல்லாமல் போகலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

எது நடந்தாலும், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்கத் தான் தயாராகவே உள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பிலும் தம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தாய்நாட்டுக்குச் சிறந்த அரசியல் எதிர்காலத்தைக்கொண்டுவருவதற்காகவேநான் இருக்கிறேன் என்பதனைத் தெளிவாக அவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன்.

என்னைக் கெட்டவராகக் காட்ட முயற்சிப்பவர்கள் நாளை அல்லது எதிர்காலத்தில் நான் சிறந்த மனிதன் என்பதனை அறிந்துகொள்வார்கள்.



இந்தப் போரில் இரண்டு விடயங்கள் எனக்கு இல்லாமல் போகும். மிகவும் சந்தோசத்துடன் நான் அவற்றை ஏற்றுக் கொள்கின்றேன். எனக்கு இல்லாமல்போகும் இரு விடயங்களில் ஒன்று என்னுடைய பதவி. அடுத்தது என்ன? என்னுடைய உயிர். இரண்டில் ஒன்றை இழக்கலாம். அல்லது இரண்டும் இல்லாமல் போகக்கூடும்–என்றார். (ஐ)

# தொழிலாளர் சம்பளம்: நாளை மீண்டும் பேச்சு

கொழும்பு, நவ. 25

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாளை திங்கட்கிழமை பேச்சு ஒன்று நடைபெறவுள்ளதாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்துதெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிதியமைச்சில் அண்மையில் இடம்பெற்ற பேச்சிலும் 600 ரூபா என்ற அடிப்படை நிலைப்பாட்டில் தான் முதலாளிமார் சம்மேளனம் இருந்தது.

ஆனால், எம்மை பொறுத்தவரை தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா என்பதே நிலைப்பாடாகும்.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாளை திங்கட்கிழமை திறைசேரியில் பேச்சு நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுக்கு முதலாளிமார் சம்மேளனத்தையும் தொழிற்சங்கங்களையும் நிதியமைச்சு அழைத்துள்ளது.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும். – என ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளார். (ஐ)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டுக் கொடுப்பனவு எங்கே?

## இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைப் பத்திரங்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லையென இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க இதனை குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகவும், சுமார் 3 மாதங்கள் தாமதமடைந்துள்ள கொடுப்பனவை விரைவில் வழங்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தனியார் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில்–

ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் கொடுப்பனவு வழங்கப்படும்–என்றார். (ஐ)

# கஜா புயலின் கோரத் தாண்டவம்;
# தென்னைகள் அடியோடு சாய்ந்தமையால் விரக்தியில் உயிரிழந்த இரு விவசாயிகள்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அருகே கஜா புயலால் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் தென்னை மரங்கள் அடியோடு சாய்ந்ததால் மன உளைச்சலில் இரு விவசாயிகள் கடந்த வியாழனன்று உயிரிழந்தனர்.

ஒரத்தநாட்டை அடுத்த சோழன்குடிக்காடு கிராமத்தை சேர்ந்த சி. சுந்தரராஜ் (வயது–57) கடந்த 30 ஆண்டுகளாக 5 ஏக்கரில் தென்னை மரங்களை நட்டு வளர்த்து வந்தார். இது ஒன்றே அவரது வருமானம். கஜா புயலால் இவர் தென்னந்தோப்பில் இருந்த 400 தென்னை மரங்களும் அடியோடு சாய்ந்து பெரும் சேதமடைந்தன. இந்த விரக்தியில் இருந்த சுந்தரராஜ், விம் குடித்து உயிரிழந்தார்.

இதேபோல ஒரத்தநாடு வட்டம் கீழவன்னிப்பட்டு கிராமத்தை சேர்ந்த சிவாஜி (வயது–52), தனக்கு



சொந்தமான ஒரு ஏக்கரில் தென்னை சாகுபடி செய்திருந்தார். புயலால் அனைத்து மரங்களும் சேதமடைந்ததால் மன உளைச்சலில் இருந்த தாகக் கூறப்படும் சிவாஜிக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது. (ஐ)

# சபரிமலையில் பெண்கள் வழிபட 2 நாள் ஒதுக்கலாம்

## கேரள அரசு யோசனை



புதுடில்லி, நவ. 25

சபரிமலை ஐயப்பன் கோவிலில் பெண்கள் மட்டும் வழிபட 2 நாள் ஒதுக்கலாம் கேரள உயர்நீதி மன்றத்தில் அம்மாநில அரசு யோசனை தெரிவித்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயதுப் பெண்களும் வழிபட உரிய பாதுகாப்பு வழங்க உத்தரவிடக்கோரி, 4 இளம்பெண்கள் கேரள உயர்நீதிமன்றில் பொதுநல மனுத் தாக்கல் செய்துள்ளனர். ரேஷ்மா நிராந்த், னிலா சஜேஷ், தான்யா, எம்.சூர்யா என்ற அந்த 4 பேரும் 20 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

அவர்கள் தங்கள் மனுவில், நாங்கள் தீவிர ஐயப்ப பக்தர்கள். உயர்நீதிமன்றத் தீர்ப்பை தொடர்ந்து நாங்கள் மாலை அணிந்து விரதம் கடைபிடித்து வருகிறோம். ஆனால், அரசியல் கட்சியினரின் எதிர்ப்பால், நாங்கள் கோவிலுக்குள் நுழைய முடியவில்லை. எனவே, அனைத்து வயது பெண்களும் வழிபட வசதியாக பிரத்தியேகமாக 2 அல்லது 3 நாள் ஒதுக்கலாம். அவர்களுக்கு உரிய பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என்று கூறி இருந்தனர்.

இந்த மனு, தலைமை நீதிபதி ரிஷிகேஷ் ராய், நீதிபதி ஜெயசங்கரன் நம்பியார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, அனைத்து வயது பெண்கள் மட்டும் வழிபட 2 நாள் ஒதுக்கலாம் என்று கேரள அரசு தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கர்நாடக பஸ் விபத்தில் 15 பேர் பரிதாபச் சாவு!



புதுடில்லி, நவ. 25

கர்நாடாகாவில் பஸ் ஒன்று ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

கர்நாடகா, மாண்டியா மாவட்டத்திலேயே நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பயணிகளை ஏற்றவந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து அருகிருந்த கால்வாயினுள் கவிழ்ந்தது. இதன்போது சிலர் நீந்திக் கரையைக் கடந்த போதும் பஸ்ஸுக்குள் அகப்பட்டிருந்த 15 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் விரைந்து பயணிகளை மீட்டுவருகின்றனர். மீட்கப்பட்ட சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இவ்விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகிறார்கள். (ஐ)

# எச்சில் துப்பினால் ரூ.1 லட்சம் அபராதம்



புதுடில்லி, நவ. 25

பொது இடத்தில் அசுத்தம் செய்வோருக்கு, 1 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கும் வகையிலான பிரேரணை, மேற்கு வங்க சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில், முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான, திரிணமுல் காங். ஆட்சி நடக்கிறது. தலைநகர் கொல்கத்தாவில் உள்ள காளி கோவிலுக்கு செல்லும் வகையில், 60 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட நடை மேம்பாலத்தை, முதல்வர் மம்தா பானர்ஜி, சமீபத்தில் திறந்து வைத்தார்.

இரண்டு நாள்களுக்கு முன், அந்த மேம்பாலத்தில் சென்ற முதல்வர், அங்கு பல இடங்களில் அசுத்தம் செய்யப்பட்டுள்ளதைப் பார்த்து, கவலை அடைந்தார். இதையடுத்து, மேற்கு வங்கத்தில், பொது இடங்களில் அசுத்தம் செய்வோருக்கு, அதிகபட்சமாக, 1 லட்சம் ரூபா வரை அபராதம் விதிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான மசோதா, சட்டசபையில், ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# இறைச்சி சர்ச்சையால் சென்னையில் குழப்பம்

## அறிக்கை கேட்கிறார் நீதிபதி

சென்னை ரயில் நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஆட்டு இறைச்சியை நாய் இறைச்சி என்று வதந்தி பரப்பியதால் சர்ச்சை ஏற்பட்டிருந்த நிலையில், இறைச்சி அழிக்கப்பட்டு விட்டதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஜோத்பூரிலிருந்து மன்னார்குடி செல்லும் விரைவு ரயில் கடந்த 17ஆம் திகதி சென்னை எழும்பூர் நிலையத்தை வந்தடைந்தது. ரயிலில் அழுகிய இறைச்சி கொண்டுவரப்பட்டுள்ளதாக உணவு பாதுகாப்புதுறைக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் மாநகராட்சி அதிகாரிகளுடன் சென்ற உணவு பாதுகாப்புத்துறையினர், பொதிகளில் சோதனை மேற்கொண்டனர். அதில் 5 இற்கும் மேற்பட்ட பெட்டிகளில் 2000கிலோ இறைச்சியிருப்பது கண்டுபிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட இறைச்சியின் வால் நீளமாக இருந்ததால் அது நாய் இறைச்சியாக இருக்குமென்ற சந்தேகம் ஏற்பட்டது.

மேலும், குறித்த சில பொதிகளைப் பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். பின் கால்நடைமருத்துவ கல்லூரிகளில்



நடைபெற்ற ஆய்வில் கைப்பற்றப்பட்டது ஆட்டு இறைச்சியே என்பது தெரியவந்துள்ளது.

ராஜஸ்தானிலிருந்து சென்னைக்கு ரயிலில் கொண்டு வரப்பட்ட இறைச்சியின் ஆய்வறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி, இந்திய கால்நடைகளுக் கான மக்கள் அமைப்பு சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் இறைச்சி குறித்த ஆய்வறிக்கையை அதிகாரிகள் வெளியிடாதமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளதுது.

இந்த வழக்கு விசாரணையின்போது அரசதரப்பு சட்டத்தரணி பறிமுதல் செய்யப்பட்ட இறைச்சியை ஆய்வுக்காக கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், அது ஆட்டிறைச்சி என்று தெரியவந்துள்ளதாகவும் கூறினார்.

பறிமுதல் செய்யப்பட்ட இறைச்சி சுகாதாரமற்ற முறையில் இருந்ததால் மாநகராட்சி அதிகாரிகள் அதனை ஆழமான இடத்தில் புதைத்து அழித்துவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் புதைக்கப்பட்ட இறைச்சி எந்த விதியின் கீழ் புதைக்கப்பட்டது என்பது குறித்து அறிக்கை அளிக்க உத்தர விட்ட நீதிபதிகள் வழக்கின் சென்னை மாநகராட்சியையும் பிரதிநிதியாக சேர்த்து வழக்கு விசாரனை டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி ஒத்திவைத்தனர். (ஐ)

# நாகை மாவட்டத்தில் தொடர்ச்சியான மழை

## மக்கள் பெரும் சிரமம்



'கஜா' புயலால் பாதிக்கப்பட்ட நாகை மாவட்டம் வனக்காடு பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், முகாம் மக்கள் உணவு தயாரிப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளகின்றனர்.

அங்கு தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், உணவு தயாரிக்கும் அடுப்பு அணையாமல் இருக்க, அப்பகுதி மக்கள் கொட்டும் மழையிலும், தார்ப்பாயை பிடித்து நின்ற காட்சி பார்ப்போரை நெகிழச் செய்துள்ளது.

'கஜா' புயலினால் வீடுகளை இழந்த மக்கள், வீதிகளில் உணவு சமைத்து வரும் நிலையில், தொடரும் கனமழையினால் அவர்கள் உணவு சமைப்பதிலும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் அடுப்பு அணையாமல் இருக்க சிலர், தார்ப்பாயைப் பிடித்து உணவு சமைத்துள்ளனர். (ஐ)

# தற்கொலைத் தாக்குதலில் பாகிஸ்தானில் 30 பேர் சாவு



இஸ்லாமாபாத், நவ. 25

பாகிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் 30 பேர் உயிரிழந்தனர். நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற இந்த தாக்குதலில் காயமடைந்த பலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிரிக்கலாம் என்றும் அச்சப்படுகிறது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணத்தில் நேற்று முன்தினம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கைபர் பக்துன்கவா மாகாணத்தின், ஓரக்சாய் மாவட்டத்தில் உள்ள கலயா என்ற இடத்தில் ஷியா முஸ்லிம்களின் 'இமாம் பர்கா' என்ற வழிபாட்டுத் தலம் அமைந்துள்ளது.

அதன் அருகே நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வாராந்த சந்தை கூடிய நிலையில், அதனை இலக்கு வைத்தே இந்த குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில், 30 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், சம்பவத்தில் 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில், பெரும்பாலானோர் சிறுபான்மையின ஷியா முஸ்லிம்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட மாகாண முதல்வர் மெகமூத் கான், நாட்டில் அமைதி நிலவுவதை எங்கள் எதிரிகள் விரும்பவில்லை என குற்றம்சுமத்தியுள்ளார்.

பாகிஸ்தான் அரசின் நேரடி நிர்வாகத்தில் இருந்து வந்த ஓரக்சாய் மாவட்டம், அண்மையில் கைபர் பக்துன்கவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வலதுசாரித் தலைவர் பாகிஸ்தானில் கைது

## நாடளாவிய ரீதியில் வெடிக்கும் ஆர்ப்பாட்டங்கள்!

இஸ்லாமாபாத், நவ. 25

பாகிஸ்தானின் தீவிர வலதுசாரி மதச் சார்ப்பான கட்சித் தலைவர் காதிம் ஹுஸ்ஸெய்ன் ரிஸ்வி கைது செய்யப்பட்டமையை அடுத்து தலைநகர் கராச்சி உட்பட நாடு தழுவிய ரீதியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கட்சித்தலைவர் ரிஸ்வி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள் பாகிஸ்தானின் பெரும் நகரங்களின் செயற்பாடுகளை ஸ்தம்பிக்க செய்துள்ளனர்.

அத்துடன், இஸ்லாம் மதத்திற்கு எதிராக அவதூறாக செயற்படுபவர்களைக் கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் தீவிரமான வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் சில பாகங்களில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதல்களிலும் ஈடுபட்டுள்ளனர். கராச்சியில் ஆர்ப்பாட்டக்காரர்களால் மோட்டார் சைக்கிள்களும், சில வாகனங்களும் எரியூட்டப்பட்டுள்ளன. அதேவேளை, அவர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

தாம் கைது செய்யப்பட்டால் வீதிகளை கைப்பற்றி பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுமாறு, கைதுக்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, ரிஸ்வி தனது ஆதரவாளர்களிடம் கோரியிருந்தார்.

இந்தநிலையில், வெள்ளிக்கிழமை இரவு லாஹூரில் உள்ள மத்ரஸா மத சார்பான பாடசாலையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என அவரது புதல்வர் அறிவித்துள்ளமையை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

முன்னதாக இந்த மாத ஆரம்பத்தில், மத நிந்தனை செய்ததாக குற்றம்சுமத்தப்பட்ட கிறிஸ்தவ பெண் ஆசிய பீபீயை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் விடுவித்ததைக் கண்டித்து தீவிர வலதுசாரி மதச் சார்ப்பான கட்சித் தலைவர் காதிம் ஹுஸ்ஸெய்ன் ரிஸ்வி நாடளாவிய ரீதியாக போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நாய்க்கறி உண்பதில் சரிவு

## தென்கொரியாவின் பெரிய நாய்க்கூடம் மூடல்



சியோல், நவ. 25

தென்கொரியாவில் உள்ள மிகப்பெரிய நாய்கள் வதைமுகாமை இடிக்கும் பணிகள் தொடங்கியுள்ளன என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் சியோலின் தெற்கே அமைந்துள்ள சங்நாம் நகரில் உள்ள டெப்யோங்-டாங் நாய்கள் வதைமுகாம் இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் பூங்கா உருவாக்கப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்த முகாமில் ஆறு நாய்கள் வதைக் கூடங்கள் இருந்தன.

தென்கொரியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் பத்து லட்சம் நாய்கள் இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன. இந்த வழக்கத்தை நிறுத்த வேண்டும் என விலங்குகள் நல செயல்பாட்டாளர்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.

தென்கொரியர்களுக்கு மிகவும் பிடித்தமான உணவாக இருந்த நாய்க்கறியை, உண்ணும் வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது.

இது ஒரு வரலாற்றுத் தருணம். நாடெங்கிலும் உள்ள பிற நாய்கள் வதைக்கூடங்களை மூட இது வழிவகுக்கும், என கொரிய விலங்குகள் நல ஆர்வலர்கள் எனும் அமைப்பு கூறியுள்ளது.

வதைகூடங்களில், நாய்களைக் கொல்ல மின்சாரம் பாய்ச்சும் இயந்திரம், கத்திகள், ரோமங்களை நீக்கும் கருவிகள் ஆகியவற்றைப் பார்க்கவே பயங்கரமாக இருந்ததாக ஹியூமன் சொசைட்டி இன்டர்நஷனல் எனும் அமைப்பு கூறியிருந்தது.

ஒவ்வொரு கோடைக் காலத்திலும் தென்கொரியாவில் உணவுத் திருவிழா நடத்தப்பட்டு, அதில் நாய்களின் இறைச்சியில் செய்யப்பட்ட பலவித மான உணவு வகைகள் பரிமாறப்படும்.

எனினும், அதைவிட கோழி இறைச்சியில் செய்யப்படும் கோழிக் கறி சூப் உள்ளிட்டவற்றை விரும்பும் தென்கொரியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு சோலில் நாய் இறைச்சி பரிமாறும் உணவகங்களின் எண்ணிக்கை 1500க்கும் அதிகமாக இருந்தன. 2015இல் அவற்றின் எண்ணிக்கை 700 அளவுக்கு குறைந்தன.

தென்கொரிய மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் நாய்களை செல்லப்பிராணிகளாக வளர்க்கின்றனர். (ஐ)

# சவுதிக்கான ஆயுத விற்பனையை நிறுத்துகின்றது டென்மார்க் அரசு




கொப்பன்ஹேஹன், நவ. 25

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலையில் சவுதி அரேபியாவின் தொடர்பு காரணமாக டென்மார்க் சவுதிக்கான ஆயுத விற்பனையை நிறுத்துவதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

ஜேர்மனிக்கு அடுத்ததாக ஜமால் கஷோக்கியின் படுகொலை காரணமாக சவுதிக்கான ஆயுத விற்பனையை நிறுத்தியுள்ள இரண்டாவது நாடு டென்மார்க் என்பது குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியாவுக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை விற்பனை செய்வதை வெளியுறவு அமைச்சகம் நிறுத்தி வைத்துள்ளது என டென்மார்க் வெளியுறவுத்துறை அமைச்சர் அன்டெர்ஸ் சாமுவேல்சன் தெரிவித்துள்ளார்.

ஜமால் கஷோக்கியின் கொலையுடன் தொடர்புடைய 18 பேரும் தமது நாட்டிற்குள் நுழைவதற்குத் திங்களன்று ஜேர்மனி தடை விதித்திருந்தது.

ஒக்டோபரில் சவுதி அரேபியாவுக்கு ஆயுத விற்பனைகளை இடைநிறுத்தம் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஜேர்மனி அழைப்பு விடுத்தது. ஆனாலும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மைக்ரோம் இதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீட்டை சுத்தம் செய்யும்போது கிடைத்த சீட்டுக்கு 1.8 மில்லியன் டொலர்கள் பரிசு




நியூயோர்க், நவ. 25

அமெரிக்காவில் தற்போது கொண்டாடப்பட்டு வரும் 'நன்றி தெரிவிக்கும்' நாளை முன்னிட்டு, வீட்டை சுத்தம் செய்துகொண்டிருந்தபோது கிடைத்த லாட்டரி சீட்டின் மூலம் தம்பதியருக்கு இந்திய மதிப்பில் சுமார் 1.8 மில்லியன் டொலர்கள் பரிசு கிடைத்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் முக்கிய விடுமுறை நாட்களில் ஒன்றான நன்றி தெரிவிக்கும் நாளை கொண்டாடுவதற்கு விருந்தினர்கள் வருவதற்கு முன்னர் வீட்டை சுத்தம் செய்துகொண்டிருந்த போது எதேச்சையாகச் சில லொட்டரி சீட்டுகள் கிடைத்தன என்கிறார் டினா எரென்பெர்க்.

கிடைத்த லாட்டரி சீட்டுகளை ஆராய்ந்து பார்த்த போது, அதில் இருந்த சீட்டு ஒன்றுக்கு 1.8 மில்லியன் டாலர்கள் பரிசு விழுந்துள்ளது தெரிய வந்ததாக அந்த தம்பதியினர் தெரிவிக்கின்றனர்.

இந்த லொட்டரி சீட்டுகள் காலாவதியாவதற்கு இரண்டு வாரங்களே உள்ள நிலையில் இவை கண்டெடுக்கப்பட்டன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

### பிலிப்பைன்ஸில் 2019 ஆண்டு இளையோர் ஆண்டு

பிலிப்பைன்ஸ் நாட்டில் கிறிஸ்தவம் விதைக்கப்பட்டதன் 500 ஆம் ஆண்டை முன்னிட்டு சிறப்பிக்கப்பட்டுவரும் ஒன்பது சிறப்பு ஆண்டுகளின் வரிசையில் ஏழாவது சிறப்பு ஆண்டாகிய 2019ஆம் ஆண்டை இளையோர் ஆண்டாக அறிவித்துள்ளனர் பிலிப்பைன்ஸ் ஆயர்கள். மறைப்பணியில் பிலிப்பைன்ஸ் இளையோர் – அன்புடையோர் – திறமையுடை யோர் – வலுவுடையோர் என்ற தலைப்பில் 2019 ஆம் ஆண்டு சிறப்பிக்கப்படும்.

காலைக்கதிர் Kalaikkathir

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### முதல் உலகப்போரில் உயிரிழந்தோருக்கு இசை நிகழ்ச்சி

முதல் உலகப்போர் முடிவுக்கு வந்ததன் முதல் நூறாம் ஆண்டு 11 நவம்பர் 2018 அன்று கடைபிடிக்கப்பட்டதையொட்டி நியூயோர்க் நகரில் ஓர் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யப்பட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகில் போர் கலாசாரம் முற்றிலும் நீக்கப்படவேண்டும் என்று விடுத்த விண்ணப்பத்தை பேராயர் அவுசா அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

# யாழ். மாவட்டத்தில் இறை பணியில்

# நான்காவது ஆண்டில் கால் பதிக்கும் ஆயரை ஆன்மீக வாழ்வு சிறக்க வாழ்த்துவோம்!

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது பணியின் 4ஆவது அகவையில் (2015-2018) கால் பதிக்கும்வேளை வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

தென் இந்திய திருச்சபை ஆயர் மேதகு கலாநிதி ஜெபநேசன் ஆண்டகை அவர்கள் யாழ் ஆயர் பற்றி தெரிவிக்கும் போது "ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் பல தளங்களில் பணியாற்றியபின் இன்று பலருக்கு நிழல் கொடுக்கும் ஓங்கிய ஆலமரமாக வளர்ந்துள்ளார். இன்று தமிழ் மக்கள் இலங்கையில் பலவித மான பிரச்சினைகளுக்கும் உள்ளூர் காழ்ப்புணர்வுகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியவர்களாகவிருக்கின்றனர்.

"இன்று கத்தோலிக்க திருச்சபையின் தலைமையை ஏற்றிருக்கும்ஆயர்யஸ்ரின்அனைத்துக்கிறிஸ்தவர்களையும் அரவணைத் துக் செல்லும் பண்பாளர். இதற்கு புரட்டஸ்தாந்து சபைகளைப்பற்றி அவர் இங்கிலாந்தில் மேற் கொண்ட ஆய்வுகள் உந்து சக்தியாக விளங்குகின்றன. புரட்டஸ்தாந்து சபைகளைப்பற்றி அவர் பேசும் பொழுது இந்த விடயங்கள் எல்லாம் இவருக்கு எப்படித் தெரிகின்றன என்று நான் அதிசயப்பட்டதுண்டு. இறைவன் காலத்திற்கேற்றதலைவர்களைத்தந்துகொண்டேயிருக்கிறார். ஆயர் யஸ்ரின் இறைவன் நமக்களித்த அருங்கொடை. இறையருள் எப்பொழுதும் அவருடன் இருப்பதாக" – என்றார்.

சிவநெறித் தவமகன், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் யாழ் ஆயர் பற்றி தெரிவிக்கும் போது "யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அறிவும் ஆற்றலும் அன்பும் நிறைந்த ஆன்மீகத்தலைவராக விளங்குகிறார். அவரை பல வருடங்களாக நான் அறிவேன். ஆசிரியராக, அதிபராக, ஆயராக தன் பணி தொடரும் சேவையாளர். நீண்ட நலத்துடன் தன்பணி தொடர இதயபூர்வமாக வாழ்த்துகிறேன். எம் மண்ணில் நல்ல சூழல் ஏற்படுவற்கு ஆன்மீக ரீதியில் குரல் கொடுப்பவர்களில் ஒருவராக விளங்கும் பெரியாரின் தொண்டு பாராட்டுதற்குரியது. நிதானமாக தன் கருத்துக்களை வெளியிடும் ஆயரின் பணி சிறக்க வாழ்த்தி அன்னாரின் ஆன்மீக வாழ்வு மேலும்சிறக்க இறையருள்வேண்டிஎனது வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறேன்" – என்றார்.



மரியன்னை வழி இயேசுவிடம் என்ற விருதுவாக்குடன் தம் பணியை ஆரம்பித்த யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நிறையவே விதைத்துள்ளார். தொடர்ந்தும் விதைத்துக்கொண்;டே இருக்கிறார். அவரது விதைப்பின் அறுவடைய அனுபவிக்க இன்னும் சில காலம் தேவை.

## உண்மையின் எண்ணங்கள்

### நான்காவது ஆண்டில் ஆயர் யஸ்ரின்

யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின்பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை தம் ஆயர்த்துவப் பணியின் நான்காவது ஆண்டில் கால் பதிக்கும் வேளை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார், யாழ் மறைமாவட்ட குருக்கள், துறவிகள், யாழ் மறைமாவட்ட பொதுநிலை இறைமக்களின் வாழ்த்துக்களை காலைக் கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக் களோடு இணைத்து தெரிவிக்கிறோம்.

ஆயர்ப் பணி பெருமையையும் பெரும் புகழையும் பெற்றுத் தருகின்ற ஒரு பணியாகப் பொதுவாகப் பார்க்கப்படுகின்ற போது அங்கே பார்க்கப்படாத ஒரு பகுதியும் உண்டு. வெண்ணிறஆடையில்சமுதாயத்தில் மதிப்போடும் மரி யாதையோடும் வலம் வரும் இவர்கள் தம் மறை மாவட்டத்தின் எல்லாப் பிரச்சினைகளையும் தம்முடைய தாக்கி - எல்லாப் பிரச்சினைகளுக்கும் தம் மண்டையை உடைத்து - எல்லோர் துன் பங்களையும் தம் துன்பமாக்கி - எல்லோர் குற்றங்களையும் தாமே செய்தவர் போலாகி - எல்லோர் குற்றச்சாட்டுக்களையும் தாமே தாங்கிக் கொண்டு - எல்லோர் பேச்சுக்களையும் தாமே கேட்டுக் கொண்டு - எல்லாப் பொறுப்புக்களையும் கூட்டாக ஏற்றுக் கொண்டு - எல் லோருக்கும் எல்லாமானேன் (1 கொரிந்தியர் 9:22) என்ற நிலையையே பெறுகின்றனர். யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின்பணிசிறக்க வாழ்த்துக்களையும் இறையாசீரையும் வேண்டி நிற்கிறோம்.

# 71 ஆவது அகவையில கொழும்பு பேராயர் மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை



கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மல்கம் கருதினால் றஞ்சித் ஆண்டகை தனது 71ஆவது அகவையில் கால் பதிக்கும் வேளை காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்து நீடுழி வாழ்க என வாழ்த்தி நிற்கிறது.

17 யூன் 1991 அன்று கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்று அதே ஆண்டு ஓகஸ்ட் 31ஆம் திகதி திருப்பொழிவு பெற்றார். புதிதாக ஏற் படுத்தப்பட்ட இரத்தினபுரி மறை மாவட்டத்தின் முதல் ஆயராக மல்கம் ரஞ்சித் ஆண்டகை 02 நவம்பர் 1995 இல் பொறுப்பேற்றார்.

1995-2001 ஆண்டு காலப்பகுதியில் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயராகப் பணிபுரிந்த பின்னர் 2001 அக்டோபர் முதல் நாள் உரோமை மறைபரப்பு பேராயத்தில் துணைச் செயலராக நியமனம் பெற்றார். 2004 ஏப்பிரல் 29இலிருந்து டிசம்பர் 2005 வரை இந்தோனேசியா மற்றும் கிழக்கு தீமோர் நாடுகளில் திருத்தந்தையின் தூதுவராகப் பணிபுரிந்தார். அப்போது அவர் பேராயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

போராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை உரோமை திருவழிபாடு மற்றும் அருளடையாளங்கள் நெறிமுறைக்கான பேராயத்தின் செயலராக 2005 டிசம்பர் 10ஆம் நாள் நியமனம் பெற்றார். அங்கு அவருடைய பணி நான்கு ஆண்டு காலமாக இருந்தது.

2009ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16ஆம் நாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் மல்கம் றஞ்சித் ஆண்டகையை கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயராக நியமித்தார். கொழும்பு உயர்மறை மாவட்டப் பொறுப்பை 05 ஓகஸ்ட் 2009 அன்று ஏற்றுக்கொண்டார்.

20 நவம்பர் 2010 அன்று திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் அவர்கள் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் 9ஆவது பேராயராக இருந்த பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகையை இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாவது கருதினாலாக நியமித்தார்.

# மனித உரிமைகள் மற்றும் சமூக நலன் முதுமாணி பட்டத்தை பெற்ற செபமாலை அடிகளார்



மனித உரிமைகள் மற்றும் சமூக நலன் தொடர்பான முதுமாணி கற்கை நெறியினை நிறைவு செய்த மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த இ.செபமாலை அடிகளார் 22 நவம்பர் 2018 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு நிகழ்வின்போது பட்டம் பெற்றுக்கொண்டார்.

இ.செபமாலை அடிகளார் பல்வேறு ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களோடு இணைந்து அவர்களுடைய உரிமைகளுக்காக பல்வேறு சர்வதேச மட்டங்களில் குரல்கொடுத்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரோடு மன்னார் மாவட்டத்தின் ஜ.எம்.எஸ்.ஈ.எஸ்.ஓ. நிறுவனத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான கொண்ஸன்ரைன் என்பவரும் முதுமாணி பட்டம் பெற்றுள்ளார். இவர்கள் இருவருக்கும் காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

# கிளிநொச்சி பஸ் நிலையத்துக்கு விரைவில் நிரந்தர தீர்வு கிட்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகளோடு கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பஸ் தரிப்பிடத்தை மக்களின் வேண்டுகோளிற்கிணங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்டத்தின் பல பொது அமைப்புகளையும் பொது மக்களையும் சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்து அறிந்து கொண்டார்.

இதன்போது கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடம் ஆரம்பக்கட்டப்பணிகளோடு கைவிடப்பட்டுள்ளது என்றும், சேறும் சகதியுமாக அவ்விடம் காணப்படுவதால் நடத்துநர்களும் பயணிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும், அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் கிளிநொச்சி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மக்களது கோரிக்கைக்கு இணங்க அந்தப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளிடம் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் காலக்கிரமத்தில் அதன் பணிகளைப் பூர்த்தி செய்து மக்களது பாவனைக்கு ஏற்ற வகையில் பஸ் நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (ஐ)

# மாங்குளம் சந்தை வளாகத்தை புனரமைக்குமாறு கோரிக்கை



முல்லைத்தீவு, நவ. 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகரப் பகுதியில் அமைந்துள்ள சந்தை வளாகத்தைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் மையமாகக் காணப்படும் மாங்குளத்தில் உள்ள சந்தை வளாகம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் நீர் தேங்கி நின்று சேறும் சகதியுமாகக் காணப்படுவதோடு பல்வேறு சுகாதாரச் சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வளாகத்தின் ஒரு பகுதியில் நீர் தேங்கி நிற்கிறது. ஏனைய பகுதியில் புற்கள் பற்றைகளாகக் காணப்படுகின்றன. இவற்றைச் சீர்செய்து சுகாதாரமான சந்தையாக மாற்றித் தருமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

இந்தச் சந்தைக்கான வீதியும் புனரமைப்பு செய்யப்படவேண்டுமெனவும், புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினர் இந்த விடயத்தை கருத்தில் கொள்ளவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந்திடம் வினவியபோது –

தற்போதைய மழைச் சூழலில் வேலைகளைத் திறம்படச் செய்ய முடியாது. இந்தச் சந்தை மற்றும் வீதி திருத்த வேலைகளுக்காக 35 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் அந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் – என்றார். (ஐ)

# ஆயுதங்களுடன் சென்றவர் கைது

வவுனியா, நவ. 25

வவுனியா – குருமன்காட்டுப் பகுதியில், ஓட்டோவில் பல ஆயுதங்களுடன் சென்ற இளைஞனை, நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் துரத்திப் பிடித்து கைது செய்துள்ளனர்.

வவுனியா – தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா – குருமன்காட்டுப் பகுதியில், போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வேகமாக வந்த ஓட்டோவை வழிமறித்த பொலிஸார், அந்த ஓட்டோ, பொலிஸாரின் சமிஞ்கையைப் பொருட்படுத்தாது சென்றுள்ளது.

இதையடுத்து, ஓட்டோவைத் துரத்திச் சென்ற பொலிஸார், வவுனியா நகரப்பகுதியில் வைத்து ஓட்டோவை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்ட ஓட்டோவைச் சோதனை செய்தபோது கத்தி, கோடாரி, பைப் போன்றவற்றைப் பொலிஸார் கைப்பற்றியதுடன், ஓட்டோச் சாரதியான அந்த இளைஞனையும் கைது செய்துள்ளனர்.

இந்த நபருக்கும் ஆவா குழுவுக்கும் இடையில் எவ்வித தொடர்புகளும் உள்ளதா என்ற கோணத்தில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தலவாக்கலையில் நேற்று மண் சரிவு

## போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்பு, நவ. 25

தலவாக்கலை பூண்டுலோயா பிரதான வீதியில் ஏற்பட்ட மண் சரிவினால், அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை பூண்டுலோயா பிரதான வீதியில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை வேளை இந்த மண்சரிவு அனர்த்தம் இடம்பெற்றதாகவும், இதனால் அப்பகுதி ஊடான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

பூண்டுலோயா பிரதான வீதியில் மண்மேடு மற்றும் கற்கள் சரிந்து விழுந்துள்ளதனால் இதனைச் சீர்செய்வதற்கு பூண்டுலோயா பொலிஸாரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால், தலவாக்கலையிலிருந்து பூண்டுலோயா செல்பவர்கள் மெதம்கும்புர வீதியை மாற்று வழியாகப் பயன்படுத்தலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையால் வீதிகளில் மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் மண் சரிவு அபாயம் ஏற்படுவதனால் வாகனங்களை வாகனச் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செலுத்த வேண்டும் எனப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# மொட்டுக் கட்சியின் ஆட்சியிலுள்ள சீதாவக்கபுர பட்ஜெட் தோற்கடிப்பு

கொழும்பு, நவ. 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியின் கீழ் உள்ள சீதாவக்கபுர நகரசபையின் வரவு–செலவுத் திட்டம் நேற்று முன் தினம் தோற்கடிக்கப்பட்டது.

சீதாவக்கபுர நகர சபையில், பொதுஜன பெரமுனவுக்கு 11 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 11 ஆசனங்களும், ஜேவிபிக்கு ஓர் ஆசனமும் உள்ளது.

இங்கு ஆட்சியமைத்துள்ள பொதுஜன பெரமுனவின் சார்பில் நியமிக்கப்பட்ட நகர சபைத் தலைவர் ரணவீர நேற்று முன்தினம் 2019ஆம் ஆண்டுக்கான வரவு– செலவுத் திட்டத்தை முன்வைத்தார்.

வரவு – செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 11 உறுப்பினர்கள் ஆதரவாகவும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் 12 பேர் எதிராகவும் வாக்களித்து வரவு–செலவுத் திட்டத்தைத் தோற்கடித்தனர்.

கொழும்பு அரசியல் குழப்பங்கள், உள்ளூராட்சிச் சபைகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கின்றன. (ஐ)

# நீரிழிவு விழிப்புணர்வுக் கருத்தரங்கு












யாழ்ப்பாணம், நவ. 25

நல்லூர் வடக்கு சனசமூகநிலையமும், யாழ்.லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து நடத்திய நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் பரிசோதனையும் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றன.

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவுநோய் மருத்துவ நிபுணர் சிவ.அரவிந்தன் கருத்தரங்கில் கலந்துகொண்டு நீரிழிவு நோய் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் இலைக் கஞ்சி வழங்கப்பட்டதுடன் பயன்தரு மரங்களும் விநியோகம் செய்யப்பட்டன. இறுதியான மரநடுகை நிகழ்வும் நடைபெற்றது. (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir



# ரசித் கானுக்காக இங்கிலாந்தின் பெண் வீராங்கனை எடுத்த முடிவு



ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் தனக்கு மிகவும் பிடித்த பெண் கிரிக்கெட் வீராங்கனை இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னாள் விக்கெட் கீப்பர் சாரா டெய்லர் எனக் கூறியுள்ளார்.

கிரிக்கெட் ரசிகர்கள் பலரிடையே மிகவும் பிரபலமான சுழற்பந்து வீச்சாளர் ரசித்கான், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த வீரராக இருந்தாலும் ரசிகர்கள் பலருக்குப் பிடித்தமான வீரராக இருந்து வருகிறார்.

இவர் தன்னுடைய சமூகவலைத்தள பக்கத்தில் எந்தப் பதிவை வெளியிட்டாலும், ரசிகர்கள் அதனை வைரலாக்கி விடுகின்றனர்.

இந்த நிலையில் ரசிகர் ஒருவர், உங்களுக்கு பிடித்த பெண் கிரிக்கெட் வீராங்கனை யார் என ரசித்கானிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு பதிலளித்திருந்த ரசித், இங்கிலாந்தின் முன்னாள் விக்கெட் கீப்பர் சாரா டெய்லர் என பதிலளித்திருந்தார்.

இதனை பார்த்த சாரா, 'நான் இப்பொழுது சந்தோசமாக இறப்பேன்' என தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

உடனே அதற்கு மீண்டும் பதிலளித்த ரசித், இறந்துவிடாதீர்கள் என கூறியுள்ளார். இந்த பதிவானது தற்போது இணையம் முழுவதும் வைரலாக பரவி வருகிறது.

# ஹர்பஜனிடம் அடி வாங்கியது குறித்து மனம் திறந்த ஸ்ரீசாந்த்

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த், ஐ.பி.எல் போட்டியில் ஹர்பஜன் சிங்கிடம் அடி வாங்கிய சம்பவம் குறித்து பிக்பாஸ் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த். இவரை ஐ.பி.எல் போட்டியின் போது, சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் அறைந்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஹிந்தி பிக் பாஸ் சீசன் 12இல் ஸ்ரீசாந்த் கலந்துகொண்டுள்ளார். இந்நிகழ்ச்சியின் தொகுப்பாளராக நடிகர் சல்மான் கான் உள்ளார். இந்நிகழ்ச்சியில் ஹர்பஜன் தன்னை அறைந்த சம்பவத்தை ஸ்ரீசாந்த் பகிர்ந்துகொண்டார்.

அவர் கூறுகையில், 'மும்பைக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்ற பிறகு, நான் ஹர்பஜனை சீண்டும் சொற்களை கூறி இருக்கக் கூடாது. அதுதான் அவரை கோபம டைய செய்தது. இருப்பினும் நான் ஹர்பஜன்



மீது மரியாதை வைத்திருக்கிறேன்.

'அந்த சம்பவத்திற்கு பிறகு இருவரும் சந்தித்துக் கொண்டு, எங்களுக்கு இடையே இருந்த பிரச்சனையை தீர்த்துக் கொண்டோம்' – எனத் தெரிவித்தார். வியாழக்கிழமை இப்பகுதி ஒளிபரப்பானதைத் தொடர்ந்து, ஸ்ரீசாந்திற்கு பார்வையாளர்களிடம் இருந்து ஆதரவு பெருகி வருகிறது.

# கோஹ்லிக்கு சவால் விடும் பங்களாதேஷ் வீரர்



பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் மோமினுல் ஹக், மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்டில் சதம் அடித்ததன் மூலம் கோஹ்லியின் சாதனையைச் சமன் செய்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள்-வங்கதேசம் அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி சிட்டகொங்கில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பாட்டத்தை துவங்கிய பங்களாதேஷ், முதல் இன்னிங்ஸில் 324 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக மோமினுல் ஹக் 167 பந்துகளில் 10 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 120 ஓட்டங்கள் குவித்தார். இது இந்த ஆண்டில் அவர் அடித்திருக்கும் 4ஆவது டெஸ்ட் சதமாகும். இதன்மூலம், இந்த ஆண்டில் அதிக சதங்கள் அடித்திருக்கும் விராட் கோஹ்லியை சமன் செய்துள்ளார் மோமினுல்.

மேலும், இந்த மைதானத்தில் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மோமினுல் ஹக்கிற்கு இது 6ஆவது சதமாகும். இதன் மூலம் ஒரே மைதானத்தில் 6 அல்லது அதற்கு மேற்பட்ட சதங்களை எடுத்த 10ஆவது துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

அத்துடன், அதிக டெஸ்ட் சதங்கள் அடித்த பங்களாதேஷ் வீரர் என்ற தமிம் இக்பாலின் சாதனையையும் மோமினுல் ஹக் சமன் செய்துள்ளார். இந்த சதம் குறித்து மோமினுல் ஹக் கூறுகையில் –

'நான் இந்த ஸ்டேடியத்தில் இறங்கியவுடன் சதம் அடிப்பேன் என்ற எண்ணத்துடன் எல்லாம் இறங்குவதில்லை. நான் உண்மையில் இதுபற்றியெல்லாம் யோசிப்பதில்லை. எனவே இது குறித்த கேள்விக்கு என்னிடம் விடையில்லை' எனத் தெரிவித்துள்ளார்.

இதுவரை 32 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மோமினுல் ஹக், 8 சதங்களுடன் 2472 ஓட்டங்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலிய அணிக்கு அபராதம் விதித்த ஐ.சி.சி.



பிரிஸ்பேனில் நடந்த இந்தியாவுக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில், பந்துவீச அதிகமான நேரம் எடுத்துக்கொண்டதற்காக ஆஸ்திரேலிய அணிக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகள் மோதிய முதல் ரி-20 போட்டி பிரிஸ்பேன் நகரில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு ஆரோன் பிஞ்ச் கேப்டனாக செயல்பட்டார்.

முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி, 17 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டதால், ஆட்டம் அணிக்கு 17 ஓவர்களாக மாற்றியமைக்கப்பட்டது.

இதனால் டக்வொர்த் லீவிஸ் முறைப்படி இந்திய அணிக்கு 174 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் ஆடிய இந்திய அணி 17 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 169 ஓட்டங்கள் எடுத்ததால் தோல்வியை தழுவியது.

முன்னதாக, ஆஸ்திரேலிய அணி பந்துவீசியபோது குறிப்பிட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுத்துக்கொண்டது. இதனைத் தொடர்ந்து, அந்த அணிக்கு ஐ.சி.சி அபராதம் விதித்துள்ளது

இதுதொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'ஐ.சி.சி கிரிக்கெட் வீரர்கள் விதிமுறை 2.5.1யின் படி, குறிப்பிட்ட நேரத்திற்குள் ஆஸ்திரேலிய வீரர்கள் பந்துவீசாமல், அதிகமான நேரம் எடுத்துக்கொண்டமை குற்றமாகும்.

எனவே, போட்டி ஊதியத்தில் இருந்து ஆஸ்திரேலிய வீரர்கள் 10 சதவிதத்தை அபராதமாக செலுத்த வேண்டும். ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஆரோன் பிஞ்ச் 2 மடங்கு அபராதம் செலுத்த வேண்டும் என எச்சரிக்கிறோம்.

அடுத்து வரும் போட்டிகளில் தொடர்ந்து இதே தவறை ஆஸ்திரேலிய தலைவர் ஆரோன் பிஞ்ச் செய்தால், அவர் ஒரு போட்டிக்கு சஸ்பெண்ட் செய்யப்படுவார். இந்தக் குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டதால் விசாரணை ஏதும் தேவையில்லை' – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறுதி ரி-20 போட்டிக்கு ஸ்டாக் பலமான ஆஸி அணி அறிவிப்பு



இந்திய அணிக்கெதிரான மூன்றாவது ரி-20 போட்டிக் கான, பலம் வாய்ந்த ஆஸ்திரேலியா அணி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த அணியில், பில்லி ஸ்டேன்லேக் உபாதையில் பாதிக்கப்பட்டுள்ளதால், முதல் இரண்டு போட்டிகளிலும் விளையாடாத வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஸ்டாக், அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார்.

ஆரோன் பின்ஞ் (அணித்தலைவர்), அலெக்ஸ் கரி, அஷ்டொன் அகர், ஜேசன் பெரேன்டொர்ப், நெதன் குல்டர் நெய்ல், கிறிஸ் லின், கிளென் மேக்ஸ்வெல், பென் மெக்டர்மோட், டி ஆர்சி சோர்ட், மார்க்கஸ் ஸ்டொயினிஸ், ஹென்ரிவ் டை, எடம் செம்பா, மிட்சல் ஸ்டாக் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், முதல் போட்டியில் ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி மழைக் காரணமாக முடிவு எதுவும் இல்லாமல் முடிவடைந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ரி-20 போட்டி, இன்று 25ஆம் திகதி சிட்னி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது சடலம் சிதைவடைந்த தால் அடையாளம் காணமுடிய வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி முன்னர் இருந்த இடத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து வந்த கடுகதி ரயிலிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## மொட்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சதி நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மைத்திரிபால சிறிசேன எமது வாக்கைப் பெற்றுக் கொண்டு ஜனாதிபதியாகி எதிர்வரும் ஜனவரி மாதம் 9ஆம் திகதியோடு 4 வருடங்கள் பூர்த்தியாகவுள்ளன.

பதவி வேண்டாம் என்று கூறிய மைத்திரிக்குப் பதவி ஆசை வந்துவிட்டது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எமது ஆதரவு கிடைக்காது என்பதை அறிந்தே மொட்டே சரணம் கச்சாமி என சரணடைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதியாக நினைத்தே மஹிந்தவோடு இணைந்து இந்தச் சதி நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்.

ஜனாதிபதிப் பதவிக்கு கோட்டாவும், பஸிலும் போட்டி போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் மஹிந்தவின் மகன் நாமலுக்கு 35 வயது வரும்வரைக்கும் காத்துகொண்டு இருக்கிறார். அதுவரை கோட்டாவும் பஸிலும் ஆட்சிக்கு வந்து விடக்கூடாது என்ற காரணத்தினாலேயே மஹிந்தவுக்குத் தற்காலிகமாக ஒருவரைப் பதவி ஆசனத்தில் அமர்த்தி வைக்க வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது.

அதேபோல் காமினி செனரத், கோட்டாபய மற்றும் நாமலுக்கு எதிரான வழக்கு விசாரணைகளில் மூவரும் சிறைக்குச் சென்று விட்டால் எதிர்வரும் தேர்தலில் குடும்ப ஆட்சியை நிறுவுவதற்குப் போட்டியிட முடியாமல் போய்விடும் என மஹிந்த எண்ணினார்.

மஹிந்தவுக்கு கட்சியோ கட்சிக் கொள்கைகளோ அல்லது கட்சியின் பின்னால் வருபவர்கள் பற்றியோ கவலையில்லை. ஆனால் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏதாவது ஒன்றென்றால் மட்டும் இதயம் துடிக்கும்.

இன்று அவர்களது பக்கத்தில் கட்சியோ கூட்டமைப்போ இல்லை. அங்கு முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் இருப்பது ராஜபக்ஷ என்ற பெயரே. அவர்களது அடிநாதம், நாமம் ராஜபக்ஷ. ஆனால் எங்களது அடி நாதம் மக்களே ஆவர்.

இன்று அவர்கள் சபாநாயகரைத் தூற்றுகிறார்கள். ஆனால் சபாநாயகர் கரு ஜயசூரிய 26ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி மஹிந்தவைப் பிரதமராக ஏற்றார்.

நாங்கள் எங்களது எதிர்ப்பை சபாநாயகருக்குத் தெரிவித்தோம். தெரிவித்து விட்டு வெறுமனே இருந்து விடவில்லை. எங்களது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டினோம். அந்தப் பெரும்பான்மைப் பலத்திற்கு மதிப்பளித்தே சபாநாயகர் செயற்பட்டுள்ளார் – என்றார். (ஐ)

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், மாவீரர் நினைவு தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசால் அனுமதி வழங்கப்படவில்லை.

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் இல்லை என்பதையும் அரசு வலியுறுத்துகின்றது – என்றுள்ளது. (ஐ)

## மஹிந்த அணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் ஜோர்ன் ரொட் இதனைத் தனது 'ருவிட்டர்' பதிவில் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், 15 நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் சந்திப்பு நடத்தியதை அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தனது 'ருவிட்டர்' தளத்தில், ஐ.தே.க., கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திப்பதை விட்டுவிட்டுத் தமது மக்களைச் சந்திப்பது நல்லது என்று கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்குக் கனேடியத் தூதுவர், உங்களின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேளுங்கள் எனப் பதிலடி கொடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இலங்கையின் உள்விவகாரங்களில் கனடா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தினர் மூக்கை நுழைப்பதாக மஹிந்த தரப்பினால் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்நிலையில், இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர்ன் ரொட், நேற்று முன் தினம் தனது 'ருவிட்டர்' பக்கத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் சர்வதேச இராஜதந்திரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ளார்.

கனேடியத் தூதுவர் மற்றும் இராஜதந்திர சமூகத்தின் மீது ஏன் இந்த நியாயமற்ற விமர்சனம்? கடந்த செவ்வாய்க்கிழமை கனேடியத் தூதுவர் மற்றும் நான் உள்ளிட்ட, கிட்டத்தட்ட ஒரு டசின் தூதுவர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நான்கு முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரை அவர்களின் கோரிக்கைக்கு அமைவாகச் சந்தித்தோம்.

அவர்களின் கோரிக்கைக்கு அமைய, இரகசியத்தன்மையை மதித்தோம்.

அதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையிலான சந்திப்புக்கு அழைக்கப்பட்டோம். இலங்கை ஜனாதிபதி, சபாநாயகர், ஏனைய பங்காளர்களுடனும் வெளிநாட்டு இராஜதந்திர சமூகத்தினர் சந்தித்துள்ளனர்.

எல்லாத் தரப்புகளினதும் கருத்துக்களைக் கேட்பது எமது பணியின் ஓர் அங்கம் என்றும் ஜேர்மன் தூதுவர் கூறியுள்ளார்.

இதையடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உயர் மட்டம், மேற்குலக இராஜதந்திரிகளுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியதும், அந்தச் சந்திப்பு குறித்த இரகசியம் பேணமுற்பட்டுள்ளதும் அம்பலமாகியுள்ளன.

சர்வதேசத் தலையீடுகள் குறித்து கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுக் கொண்டு, மஹிந்த தரப்பு, சர்வதேச இராஜதந்திரிகளுடன் இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தியிருப்பது, கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையின் கீழ் உருவாக்கப்படும் புதிய கூட்டணியுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ள சந்திரிகா திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கித் தேர்தலை எதிர் கொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்தக் கூட்டணியுடன் சந்திரிகாவும் இணையவுள்ளார். கூட்டணி தொடர்பில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள் ளன. தலைமைச் சபையின் கீழ் இயங்கும் இந்தப் புதிய அரசியல் முன்னணி, எதிர்வரும் நாள்களில் ஆரம்பித்து வைக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

பிரதான அரசியல் கட்சிகள் பிளவுபட்டுள்ள நிலையில், பல்வேறு பிரிவுகளாகப் பொதுத் தேர்தலில் ஈடுபடத் தயாராகி வருகின்றன.

இந்நிலையில் மைத்திரி – மஹிந்த கூட்டணியை வெற்றி கொள்ளும் நோக்கில் பலமான கூட்டணியை அமைக்கும் தீவிர முயற்சியில் சந்திரிகா நேரடியாக ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

## மஹிந்த செய்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இடைக்கால அரசின் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அரசியல் ரீதியில் பாரிய தவறு இழைத்துவிட்டார்.

சற்றுப் பொறுத்திருந்தால் நாட்டு மக்களே ஜனநாயக ரீதியில் ஆட்சி அதிகாரத்தை அவருக்கே மீண்டும் கையளித்திருப்பார்கள்.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டவர்கள் இன்று தம்மைத் தாமே ஆளும் தரப்பினர் என்று குறிப்பிட்டுக் கொள்ள எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் சற்றுவிட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)

## 27ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 மணிக்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

2008, 2009 காலப்பகுதியில் தலைநகர் கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி என்பவருக்கு அடைக்கலம் வழங்கினார் என ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் பணி நிமித்தம் வெளிநாடு சென்றிருந்ததால் அவர் அங்கு ஆஜராகியிருக்கவில்லை.

எவ்வாறாயினும் முப்படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் இரண்டு சந்தர்ப்பங்களில் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியின் ஆலோசகராகவும் பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவுக்கு நேற்று முன் தினம் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கலாநிதி சுரேன் ராகவனை, ஊடகப்பிரிவுப் பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அதேவேளை, ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக இருந்த, சமிந்த சிறிமல்வத்த, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவுத் தலைவராக மாற்றப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன அமைச்சராக இருந்த காலத்தில் இருந்தே, அவரது தனிப்பட்ட அதிகாரியாக சமிந்த சிறிமல்வத்த பணியாற்றியிருந்தார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தும் இணக்கப்பாட்டுடனேயே, கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

எனினும், இரண்டாவது பதவிக்காலத்துக்காக மைத்திரிபால சிறிசேன போட்டியிடமாட்டார் என்று அவருக்கு நெருக்கமான தரப்புகளை மேற்கோள்காட்டி, 'அனித்த என்ற சிங்கள இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்தில் மைத்திரிபால சிறிசேனவின் செல்வாக்கு படுமோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அவர் மீது பொதுமக்கள் ஆழ்ந்த அதிருப்தி கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது பொருத்தமில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலம் முழுவதும் பதவியில் இருக்க விரும்புகின்றார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அணியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே, விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் வாய்ப்பு இல்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை அது பொதுத் தேர்தலுக்கு தயாரில்லை.

இந்த நிலையில் அந்தக் கட்சியைக் கூட்டாட்சி ஒன்றை அமைக்க வருமாறு அழைப்பு விடுக்கிறோம்.

ஏனைய கட்சிகளும் இந்தக் காபந்து அரசில் பங்கேற்க முடியும். இந்தக் காபந்து அரசின் கீழ் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல முடியும்.

இந்தக் காபந்து அரசில் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஏனைய கட்சிகளோ பிரதமர் ஒருவரை நியமிக்க முடியும்.

எனினும் ரணில் விக்ரமசிங்கவைப் பிரதமராக்க ஜனாதிபதி விருப்பம் கொண்டிருக்காமையால் வேறு ஒருவரை ஐ.தே.க பரிந்துரை செய்ய முடியும் – என்றார். (ஐ)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். தாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை என்றும், ஆனால் நீதியான ஒரு அரசின் கீழ் தேர்தலை நடத்தவே போராடுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

கண்டியில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வாரத்தில், உலகில் எந்தவொரு சபாநாயகரும் முகம் கொடுக்காத பிரச்சினைகளுக்கு கரு ஜயசூரிய முகம் கொடுத்தார்.

எனினும் சபாநாயகர் வளைந்து கொடுக்காமல் நேர்மையாக செயற்பட்டார். இதற்காக நாம் அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம். தற்போது அவர்கள் சபாநாயகருக்கு ஏசுகின்றனர். அவர் செய்த தவறு என்ன? நிலையியற் கட்டளையை நடைமுறைப்படுத்தியதா?.

நாட்டின் பெரும்பான்மையானவர்கள் மஹிந்தவை ஓரம் கட்டவேண்டும் என ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வாக்களித்தனர். ஆனால் இங்கு என்ன நடந்துள்ளது. மக்கள் வேண்டாம் என நிராகரித்தவர்களை ஜனாதிபதி மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவந்துள்ளார். இது தான் ஜனநாயகமா?

இது இப்படியே நீடித்தால் என்ன நடக்கும். வாக்குப்பலம் இல்லாமல் போகும், நாடாளுமன்றப் பலம் குறையும், மக்களின் எதிர்காலம் இல்லாமல் போகும். அந்த உரிமைகளைப் பாதுகாக்கவே நாம் செயற்படுகின்றோம்.

நாம் தேர்தலுக்குச் செல்ல அஞ்சவில்லை. ஆனாலும் நீதியான ஓர் அரசின் கீழ் நாம் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் அரசமைப்புக்கு அமைய அது சட்டரீதியான தேர்தலாக அமையாது – என்றார். (ஐ)

## காபந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காபந்து அரசு அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன அழைப்பு விடுத்துள்ளார். இதிலிருந்து அவர்கள் பயந்துவிட்டார்கள் என்பது புலப்படுகிறது. ஆனால், நாங்கள் அவர்களுடன் இணையப் போவதில்லை.

நாம் தேர்தலுக்குச் செல்வதற்குத் தயாராகவுள்ளோம். 2019ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதிக்கு ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல முடியும்.

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பை குழப்பியவர்கள், பொதுத் தேர்தலில் குழப்பத்தை ஏற்படுத்த என்னென்ன செய்வார்கள் என்பதை எம்மால் ஊகித்துக் கொள்ள முடியும்.

பொலிஸ், இராணுவம், அரச ஊடகங்களை பயன்படுத்தி எமது வாக்குகளைச் சூறையாட இந்த அரசு முயலுமாயின் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

யார் என்ன சதித்திட்டங்களை தீட்டினாலும் அதனை முறியடித்து ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஆட்சியை நிலைநிறுத்துவோம் – என்றார். (ஐ)

# கூட்டமைப்பின் வாக்கு வங்கி சரியும் ஈ.பி.டி.பி. 4 ஆசனங்கள் கைப்பற்றும்

## எஸ்.பி. திஸாநாயக்க ஆரூடம்



கொழும்பு, நவ. 25

பொதுத் தேர்தலில் 60 சதவிதமான வாக்குகள் மைத்திரி, மஹிந்த கூட்டணிக்கே விழும் என ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க ஆரூடம் கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்வாக்குவங்கியும்சரியும்.ஈ.பி.டி.பி. 4 ஆசனங்களைக் கைப்பற்றும் என்றும் அவர் கூறினார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு இன்னும் ஐந்து நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். முக்கிய உறுப்பினர்கள் எம்முடன் இணையவுள்ளனர். உரிய நேரத்தில், உரிய வகையில் அந்தச் சம்பவம் நடைபெறும்.

பொதுத்தேர்தலொன்று நடத்தப்பட்டால் எமக்கே வெற்றி நிச்சயம். 120 இற்கு மேற்பட்ட ஆசனங்கள் சகிதம் ஆட்சியமைப்போம். ஐக்கிய தேசியக் கட்சியால் 45 ஆசனங்களையே கைப்பற்ற முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியும் சரியும். ஈ.பி.டி.பி. 4 ஆசனங்களைக் கைப்பற்றும்.

அதேபோல் மலையகத்தில் தொண்டமானே வாக்குவேட்டை நடத்துவார். தமிழ் முற்போக்குக் கூட்டணியால் நுவரெலியாவில் ஒரு ஆசனத்தை மட்டுமே கைப்பற்றக்கூடியதாக இருக்கும். முஸ்லிம் காங்கிரஸிடைவிட, அதாவுல்லாவின் கட்சி அதிக ஆசனங்களை வெல்லும் – என்றார். (ஐ)

## பெரும்பான்மை இல்லாவிட்டால் விலகிக்கொள்வதே ஜனநாயகம்

### சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 25

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பது நிரூபிக்கப்பட்ட பின்னர் ஆளும் கட்சியிலிருந்து விலகிக் கொள்வதே ஜனநாயகமாகும். எனினும், அரசு எனச் சொல்லிக் கொள்ளும் தரப்பினர் ஜனநாயகத்துக்கு விரோதமாகத் தொடர்ந்தும் ஆளும் தரப்பில் இருக்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து உண்மையை ஏற்றுக் கொள்ளாது பலவந்தமாக தமது அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஆளும் கட்சியினராகச் செயற்பட்டு வருகின்றனர். தெரிவுக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான குழுவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காண்பிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி பதவியேற்ற அரசுக்கு சட்டரீதியான உரிமை எதுவும் இல்லை என்பதுடன் அவர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்வது ஜனநாயகத்துக்கு விரோதமானதாகும். எமது தரப்பில் 121 பெரும்பான்மையைக் கொண்ட உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்பதை உலகத்துக்குக் காண்பிக்க முடிந்துள்ளது. இவ்வாறான நிலையில் நாடாளுமன்றத்தில் உள்ள குழுக்களுக்கு அவர்களின் சார்பில் பெரும்பான்மையானவர்களை நியமிக்க முடியாது. அதேபோன்று தெரிவுக்குழு உறுப்பினர்கள் நியமனம் குறித்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் யாருக்குப் பெரும்பான்மை உள்ளது என்பது புலனாகியுள்ளது –என்றார். (ஐ)

## ஐ.தே.கவுக்கு தலைமையேற்க நான் தயாராகவே உள்ளேன்

### கண்டியில் சஜித் அறிவிப்பு

கொழும்பு, நவ. 25


கட்சியின் தலைமையினாலும், கட்சியின் மத்திய செயற்குழுவினாலும் என்னிடம் தலைமைத்துவப் பொறுப்பு சுமத்தப்படின் அதனை ஏற்று முன்கொண்டு செல்ல நான் தயாராகவே உள்ளேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டுக்காக தன்னுடைய உயிரைக் கொடுத்தேனும் பணியாற்றுவேன். தோற்கடிக்க முடியாது என்று கூறிய ஜனாதிபதியை நாம் தோற்கடித்தோம் அல்லவா? நாம் ஒன்றுபட்டால், அனைத்தும் சாத்தியமாகும். நம்பிக்கையுடன் இருந்தால், அடுத்த மாகாண சபைத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வெற்றி பெறுவது நாம் தான் – என்றார். (ஐ)

## மாத்தறையில் மாணவன் கொலை!



கொழும்பு, நவ. 25

மாத்தறை – எலவெல்ல வீதியிலுள்ள தனியார் கற்கை நிறுவனமொன்றுக்கு அருகில் 19 வயதான மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனியார் கற்கை நிறுவனமொன்றுக்கு அருகில் மாணவர்களிடையே நேற்றுச் சனிக்கிழமை ஏற்பட்ட மோதலின்போதே இந்த மாணவர் கூறிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மோதலில் பலத்த காயமடைந்த மாணவர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மாத்தறையிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 13 இல் கல்வி கற்கும் ரசிது ஹிம்ஹான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாத்தறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## நாடாளுமன்றம் முழுவதும் துளாவிய மோப்ப நாய்கள்!

கொழும்பு, நவ. 25

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் அமர்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் நாய்களினால் சபாநாயகரின் மேசை மற்றும் ஆசனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதேபோன்று நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களின் மேசைக்குள் புகுந்து நாய்கள் சோதனையிட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சபாநாயகரின் மேசை மீது மற்றும் மேசைக்குக் கீழ் கடுமையான சோதனைகளை மேற்கொள்வதற்கு விசேட அதிரடிப்படையினரின் நாய் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் அனைத்து உறுப்பினர்களினதும் மேசை, கதிரை மற்றும் ஆவணங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் நுழையும் பகுதியில், உத்தியோகபூர்வ இலக்கத் தகடுகள் கொண்ட பொலிஸ் அதிகாரிகள் உறுப்பினர்களை முழுமையாகச் சோதனையிட்டுள்ளனர். அத்துடன் நாடாளுமன்ற வளாகத்தில் ஏனைய நாள்களை விடவும் அதிக பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## தேர்தலை நடத்த முன்னர் குழப்பம் நீங்கவேண்டும்

### அனுரகுமார கோரிக்கை



கொழும்பு, நவ. 25

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் நிலவும் அரசமைப்புக்கு முரணானநிலைமையிலிருந்து விடுபட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

காலியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய சூழ்நிலை தொடர்ந்தால், எதிர்காலத் தலைமுறையினருக்கு அது மோசமான முன்னுதாரணமாக அமைந்து விடும்.

எனவே, தற்போதைய அரசியல் கட்சித் தலைவர்கள் தமது நாளைய அரசியல் செயற்பாடுகளையும், எதிர்காலச் சந்ததியையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)

## மகாநாயக்கர்களிடம் ஆசி பெற்றார் ரணில்

கொழும்பு, நவ. 25

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க நேற்றுக் காலை அஸ்கிரிய, மல்வத்து பீட மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளார்.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு அவர் மகாநாயக்கர்களிடம் சென்று ஆசீர்வாதம் பெற்றுள்ளார்.

மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஆகியோர் ரணிலுக்கு ஆசீர்வாதம் வழங்கினர். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.